# வாழுகின்ற வாலிபங்கள்

## யாழ் நடராசா கண்ணப்பு

அழிக்கின்ற ஆயுதங்களை
அழிக்கின்ற ஆதவனாய்
விழிக்கின்ற விடியலிலே
கிழிக்கின்ற விதைமுளையாய்..



மணிமேகலைப் பிரசுரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழுகின்ற வாலிபங்கள்

(கவிதைத் தொகுப்பு)

ஆசிரியர் :

**யாழ் நடராசா கண்ணப்பு**


**மணிமேகலைப் பிரசுரம்**

தபால் பெட்டி எண் : 1447

4, தணிகாசலம் சாலை,

தியாகராய நகர்,

சென்னை - 600 017.

தொலைபேசி : 4342926

தொலைநகல் : 044-4346082

மின் அஞ்சல் : e-mail : tambhi @ md2.vsnl.net.in (MANIMEKALAI)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூல் விபரம்


| | |
|---|---|
| நூல் தலைப்பு | ➢ வாழுகின்ற வாலிபங்கள் |
| ஆசிரியர் | ➢ யாழ் நடராசா கண்ணப்பு |
| மொழி | ➢ தமிழ் |
| பதிப்பு ஆண்டு | ➢ 1999 |
| பதிப்பு விபரம் | ➢ முதல் பதிப்பு |
| உரிமை | ➢ ஆசிரியருக்கு |
| தாளின் தன்மை | ➢ 11.6 கி.கி. |
| நூலின் அளவு | ➢ கிரௌன் சைஸ் (12½ x 18½ செ.மீ.) |
| அச்சு எழுத்து அளவு | ➢ 10 புள்ளி |
| மொத்த பக்கங்கள் | ➢ 144 |
| நூலின் விலை | ➢ ரூ. 27.00 |
| அட்டைப்பட ஓவியம் | ➢ ஓவியர் ராமு |
| லேசர் வடிவமைப்பு | ➢ கிறிஸ்ட் டி.டி.பி. சென்டர், சென்னை - 24. |
| அச்சிட்டோர் | ஸ்கிரிப்ட் ஆப்செட் சென்னை - 94. |
| நூல் கட்டுமானம் | ➢ தையல் |
| வெளியிட்டோர் | ➢ மணிமேகலைப் பிரசுரம், சென்னை - 17. |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| வ.எண் | தலைப்பு | பக்க எண் |
|---|---|---|
| 1. | அற்பமாய் சுடுகின்றாய் | 11 |
| 2. | ஈழம் என்றொரு பெயர் கொண்டாய் | 12 |
| 3. | ஏந்தியே | 16 |
| 4. | எழில் பொற்காலம் | 18 |
| 5. | எழுக! எழுக!! | 20 |
| 6. | எங்கே நீ! | 21 |
| 7. | இரண்டாயிரம் ஆண்டே இனிதே வா! | 23 |
| 8. | இருளை ஏன் அழைத்தாய்! | 28 |
| 9. | இரவுக்குள் அழுகை | 29 |
| 10. | இசை மீண்டும் இனம்பெற | 33 |
| 11. | ஜீவ நீர் | 34 |
| 12. | கறுத்த மச்சான் கள்ள சிரிப்போடி.. | 36 |
| 13. | கேள்விகள்... கேள்விகள் மட்டுமே | 38 |
| 14. | மாட்டுப்படலாமோ? | 43 |
| 15. | மனிதர்கள் நாளை பிறப்பார்கள்.. | 44 |
| 16. | மிதக்கின்ற சுடமைகள் | 46 |
| 17. | முப்பரிமானம் | 48 |
| 18. | முரண்படும் முடங்கள் | 54 |
| 19. | நான் ஏன் மரணிப்பதில்லை? | 57 |
| [illegible]. | நேசம் | 59 |
| 21. | ஓ... பிரியமுள்ள யாழ்ப்பாணமே! | 61 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| வ.எண் | தலைப்பு | பக்க எண் |
|---|---|---|
| 22. | ஒரு ஒட்டாத பயணம் | 65 |
| 23. | பறப்பதற்கு ஒரு (நெசவுத்) தறி | 67 |
| 24. | பூரானின் பீலி நிலம் பிளந்தாச்சு | 69 |
| 25. | பொருள் ஏதடா? | 82 |
| 26. | புலம் பெயர்ந்தவைகள் | 84 |
| 27. | புத்தாண்டு வரும் | 87 |
| 28. | சாட்சிப் பூக்கள் | 95 |
| 29. | சகிப்புச் சத்திரம் | 97 |
| 30. | சிரிப்பொலி | 100 |
| 31. | சிரித்தே நீ எரிக்கவேண்டும் | 102 |
| 32. | சுதந்திரக் குயவர்கள் | 103 |
| 33. | தெய்வம் தேவை | 106 |
| 34. | வளர். வளர். வளர்.. | 107 |
| 35. | வாழுகின்ற வாலிபங்கள் | 114 |
| 36. | வானின் ஜோதியே... | 122 |
| 37. | வன்னிமண்ணே... வன்னிமண்ணே... | 124 |
| 38. | விளைநிலத்தில் விதை வெடிக்க.. | 128 |
| 39. | விலகிவிடு | 134 |
| 40. | யாரிட்ட நெருப்பு | 135 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை

எல்லோருக்கும் என் அன்பான வணக்கங்கள்.

இக் கவித்தொகுப்பை வாசிக்கு முன், உங்களோடு என் எண்ணத்தைப் பகிர்ந்து கொள்ள விரும்புகின்றேன்.

கவியரங்குகளில் குறிப்பாக நெதர்லாந்தில் 1988 தொடங்கி 1999 வரை நான் சமர்ப்பித்த கவிதைகளின் தொகுப்பே இந் நூலாகும்.

கவியரங்குகளுக்கென ஆக்கப்படும் கவிதைகளில் சில விசேட அம்சங்களைக் கருத்தில் கொள்ளுதல் அவசியமாகின்றது. பல நிகழ்ச்சிகளுக்கிடையே கவிதையும் ஒரு அங்கமாக இருக்கும். வருகின்ற எல்லாப் பார்வையாளர்களின் கவனத்தையும் கவிதை கவர்வதில்லை. கவிதையின் கனமான சொற் பிரயோகமும் வாசிப்பவரின் தான் கொண்டு வந்த கவிதையிலுள்ள (உடல் பொருள் ஆவி) ஈடுபாட்டுக் குறைவும் குரல் வளமின்மையும் வெளிப்படுத்தல் தோரணையில் கவனம் செலுத்தாமையுமே காரணங்களாகும்

நான் ஒரு நடிகன், நாடகாசிரியன், நாடக இயக்குநர். இத் துறையில் எனக்கு ஒரு நீண்ட அனுபமிருக்கின்றது.

கவிதையை ஆக்கும் போது நாடகபாணியில் இயற்றுவது என் தனிப்பட்ட முறையாகும். அதனால் கவி மரபு சில வேளைகளில் மீறப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்தைவிட்டு இடம்பெயர்ந்தோர் மத்தியில் அவர்களுக்குச் சொந்தமான இயற்கையைப் படம் பிடித்து அவர்களை அவற்றை மீண்டும் அனுபவிக்கச் செய்து ஒரு பெறுமதியான தாய் நாட்டுப்பயணத்தைத்தான் நான் இலவசமாக இக் கவிகள் மூலம் வழிநடத்தியுள்ளேன்.

மேலும் இக் கவிதைகள் மூலம் ஒரு மறைமுகமான மருத்துவச் சிகிச்சையும் நிகழ்கின்றது.

ஏனென்றால் எம்மோடு பிறப்பிலிருந்து இணைந்து விட்ட எங்கள் உறவும் சூழலும் ஆத்மாவின் ஆரோக்கியத்திற்கு எங்கள் இதயத்திற்கு அவசியத் தேவைகளாகும்.

இங்கு நான் மிக அமைதியாக ஒரு விடயத்தைத் தெளிவாக்க வேண்டும். பனங்கொட்டை யாழ் மக்களின் நீடித்த சகிப்புத் தன்மைக்கும் கொண்ட கொள்கைப் பற்றிலுள்ள உறுதிக்கும் ஒரு குறியீடாகும்

விழித்தெழுகின்ற உறங்கிக் கிடக்கின்ற விதைமுனை கடினத்தை வென்று மேலெழுகின்றது.

இது எங்கள் இயற்கை எங்களுக்குக் கற்பித்த பாடமாகும். அது பின்னர் கடினமான சூழலில் ஒரு கற்பக விருட்ஷமாய்க் கானலைக் கனியாக்கித் தருகின்றது. யாழ்ப்பாணம் வறண்ட வலயமாயிருப்பினும் ஒரு வளையாத வீரத்தின் உறுதியின் விளை நிலம்.

அடக்கு முறை எந்த வடிவத்திலிருந்தாலும் அவை மீறப்படும்!!!

பொக்கை வாய்ப் பொன்னம்மாவின் திகிற் கதைகள், குழைக்கின்ற சோற்றுக் கவளம் எங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெஞ்சங்களிலெல்லாம் நேசநெருப்பைத் தூண்டுகின்ற எங்கள் உறவு முறையின் உன்னதங்களல்லவா?

**பொன்னள்ளி வீசும் பௌர்ணமி நிலவினிலே**
**பொக்கை வாய்ப் பொன்னம்மா**
**பெடி பெட்டை சூழ்ந்திருக்க**
**பக்குவமாய்ப் பழங்கதைகள் பகன்றிடுவாள்**

**பேத்தியவள் பனங்கிழங்கின் நாரெடுப்பாள்**
**பூட்டியவள் பாக்குரலில் இடித்தெடுப்பாள்**
**பொச்சை வாயதைப் பொச்சடிக்கும்**
**பெடி பெட்டை மனம் புல்லரிக்கும்**

இந்தக் கிராமிய முற்றத்து உறவு எங்கள் ஆத்துமாவோடு நித்தியம் வரை பேசப்படுகின்ற யதார்த்தமல்லவா?

எம்மினம் போர் முனையில் நிற்கும் போதும் வாழ்த்தத் தான் வேண்டும். வருடம் வருகின்றது சகல எதிர்பார்ப்புகளோடும் மகிழ்வோடும் எதிர்நோக்கத்தான் வேண்டும்.

விடுதலை என்பது உயிரினத்தின் உடைமை. தாவரம் விலங்கு போன்ற எல்லா உயிரினத்தின் தொடக்கமே போராட்டத்தில் தான். உறங்கிக்கிடக்கின்ற முட்டைக் கருவிலுள்ள ஜீவன் தன் அலகுக் கூர்மையினால் யுத்தம் செய்து முற்றுகையை உடைக்கின்றது. என் கவிதைகளில் இந்த இயற்கை உண்மை பேசப்படுகின்றது. இதற்குக் கூடுதலான இடத்தையும் கொடுத்திருக்கின்றேன் என்பதும் உண்மை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமது ஈழமக்கள் அடைந்த துயரம் உலகறிந்த விடயம். நானும் அதில் ஒரு அங்கம். எங்கள் ஆதங்கம் எல்லாம் விடுதலை வேண்டும் என்பது தான். அரசியல் விடுதலை அறிவியல் ரீதியான விடுதலை என்ற இரண்டும் எங்கள் வாஞ்சையாகும்.

மக்கள் கூடுகின்ற ஒரு தேவஸ்தானம் ஒன்றுண்டு. அதில் உலக நீதிகள் எல்லாம் ஒருமித்து ஒரு தீபமாய் ஒளிர்ந்து கொண்டிருக்கும். அதன் மூலஸ்தானத்தில் சமாதானம் எனும் தெய்வம் ஒன்றேயிருக்கும்.

வருகின்ற யுகத்திலே மனித குலத்தின் சமாதானத்தை வளர்...வளர்...என வாழ்த்துவோமாக.

இக் கவிகள் மூலம் நான் ஒரு வாழ்த்துப் பாமாலை பாட முற்பட்டிருக்கின்றேன், துயரப்படுவோர்க்காக இறை துதியை ஏறெடுத்திருக்கின்றேன்.

வாழுகின்ற வாலிபங்கள் கவிதை தியாகிகள் சகலருக்குமான என் நியாயமான புனித வணக்கமாகும்.

இவை தவிர வாகனிங்கன் விவசாயப் புல்கலைக்கழக மாணவர் ஏடானது(றியாங்கிள்) எனது கவிதைகளையும் பிரசுரித்தன, இவை பெரும்பாலும் ஆங்கிலத்திலேயே எழுதப்பட்டன, பின்னர் இவற்றை இங்கு தமிழாக்கம் செய்து இணைத்துள்ளேன். இக் கவிதைகள் கவி மரபின்றிக் காணப்படினும் குறியீட்டு முறையில் மனிதத்தின் சில ரகசியங்களை விவாதித்திருக்கின்றேன்.

நெதர்லாந்தின் வருடாந்த கவிதைத் தெரிவில் எனது கவிதையான ..கேள்விகள்... கேள்விகள் மட்டுமே....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரிவுசெய்யப்பட்டுக் கௌரவிக்கப்பட்டது என்பதையும் மகிழ்ச்சியோடு தெரிவிக்கின்றேன். இதன் தமிழாக்கத்தை அப்படியே தந்திருக்கின்றேன்.

பிறக்கப் போகின்ற பெரிய யுகத்திற்குச் சிறிய முகவுரையை இக் கவிகள் மூலம் எழுதியிருக்கின்றேன்.

ஒன்றே குலம். ஒருவனே தேவன்.

**ஒரு உலகம்**
**ஒரு நீதி**
**உலக சமாதனம் எங்கள் கனவு.**
**இதுவே எங்கள் பிரார்த்தனையும் கூட.**

இத் தொகுப்புக்கு உதவிய சகலருக்கும், குறிப்பாக மணிமேகலைப் பிரசுரத்தினருக்கும் அதன் நிர்வாக முகாமையாளர் எம் வளர்ச்சியில் தன் சகோதரர் போல் அக்கறை கொண்டிருக்கும் சகோதரர் திருவாளர் ரவி தமிழ்வாணன் அவர்களுக்கும் எனது நன்றிகள்.

Van Uvenweg, 14,
Wageningen,
Netherlands,
ohmnld@netscape.net
nkannappu@hotmail.com
tp: 0317424044

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விற்பனையாகும் இதர நூல்கள்

| | |
|---|---|
| தசவர்க்க ஜாதக விளக்கம் | 32.00 |
| வராகமிகிரரின் பிருகத் ஜாதகச் சாரம் | 32.00 |
| செவ்வாய் தோஷப் பரிகாரமும் மாங்கல்ய பாக்கியமும் | 20.00 |
| பெண்களின் ருதுஜாதகமும் வாழ்க்கைநலமும் | 35.00 |
| ஜாதக அலங்காரச் சாரம் | 37.00 |
| ஜாதக தோஷ சாந்திப் பரிகார முறைகள் | 23.00 |
| புகழ்பெற்றவர்களின் ஜாதகங்கள் | 39.00 |
| புத்திர தோஷமும் பரிகாரமும் | 10.00 |
| அஷ்டவர்க்க ஜாதகப் பலன்கள் | 17.00 |
| கௌசிக ஜோதிட சிந்தாமணி | 17.00 |

### ☞ ஜோதிட இரகசியம் - Secret of Astrology ☜

| | |
|---|---|
| புலிப்பாணி முனிவரின் ஜாதக இரகசியங்கள் | 57.00 |
| ஜோதிட மாமேதைகள் சொல்லும் சூசகங்களும் நுட்பங்களும் | 39.00 |
| உங்கள் நட்சத்திரப் பலனும் அதிர்ஷ்ட இரகசியமும் | 27.00 |
| பெண்கள் ஜாதக இரகசியங்கள் | 15.00 |

### ☞ அதிர்ஷ்ட கற்கள் - Lucky Stones ☜

| | |
|---|---|
| நவரத்தினங்களும் உங்கள் அதிர்ஷ்டங்களும் | 12.00 |
| நோய் நீக்க உதவும் இரத்தினங்களும், இராசிக் கற்களும் | 42.00 |

### ☞ உங்கள் ஜாதகம் - You & Your Horoscope ☜

| | |
|---|---|
| உங்கள் ஜாதகப்படி நிகழும் திசா புத்திப் பலன்கள் | 74.00 |
| உங்கள் ஜாதகப்படி என்ன தொழில் செய்யலாம்? | 17.00 |
| உங்கள் ஜாதகப்படி ஆயுளும் ஆரோக்கியமும் | 35.00 |
| உங்கள் ஜாதகப்படி உங்கள் குடும்பம் | 32.00 |
| உங்கள் ஜாதகப்படி செல்வமும் வாழ்க்கை வசதிகளும் | 27.00 |
| உங்கள் ஜாதகப்படி அமையும் அதிர்ஷ்டங்களும் ராஜ யோகங்களும் | 21.00 |
| உங்கள் ஜாதகப்படி ஏழரை நாட்டுச் சனியும் அஷ்டமத்துச் சனியும் | 30.00 |
| உங்கள் ஜாதகத்தில் நாக தோஷமும் பரிகாரங்களும் | 12.00 |
| உங்கள் பிறந்த தேதியின்படி திருமண வாழ்க்கை எப்படி அமையும்? | 21.00 |
| உங்கள் ஜாதகப்படி ஆயுள் நிர்ணயமும் மாரகமும் | 18.00 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழுகின்ற வாலிபங்கள்

## அற்பமாய் சுடுகின்றாய்

சூரியனைச் சூழ்ந்து நிற்கும்
சூடான கதிர்களுக்குக் குளிரூட்ட

ஆலவட்டம் பிடிக்கின்ற அதிசயப் பேரொளிகள்
அக்கினித் தீபங்களாய் அந்தரத்தில் சுந்தரமாய்,

பொன்னிறங்கள் பொங்கலிடப் பொலிந்து,
வான் வெளியே
சந்திர நட்சத்திரத்
தொங்கலின் தோரணங்கள்,

நாளெல்லாம் வர்ணங்களின் பொங்கலிலே
திருவிழாக்கள் காணுகின்ற
சுத்தமான சூரியனைப்
பொன்னிறங்கள் பொங்கலிட,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாநிலத்தில் மாயமாய்ப்
பொங்கலென்று
பொய்யாய்ச்
சூரியனை
நீ ஏன்
உன்நிலத்தில் அற்பமாய்ச் சுடுகின்றாய்?

## ஈழம் என்றொரு பெயர் கொண்டாய்

செல்ல முகமே செவ்வரத்தைக்குள் சிரிப்பெடுத்து
சொல்லித் தந்தாய் பள்ளியிலே நட்பை
நாலெழுத்து நானறிய முன்பு
கடித்துக் கொடுத்தாயே
உன்னன்பை மாங்காய்ப் பிஞ்சினிலே!

கனவுகளில் உன்முகம் சூரியோதயம் அவை
காலைகளை எந்நேரமும் காவி வரும்
நண்பா நீ முதலெழுதிய அகரம்
நானறிந்த அன்புக்கு முதலெழுத்தல்லவா?

நிலவுக்குள் நீ வருவாய்
சிகரமாய் சிரிப்பாய்
நட்பின் இலக்கணமாய்
இனிக்குது அது இன்று வரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ் மண்ணில் நாம் வாசித்தது
ஆத்ம நரம்பில் அன்பெனும்
சுரத்தையல்லவா?

இன்று வரை அந்த அகரம் தானே
எம் கவிக்குக் காலாய் நடக்கின்றது!

நண்பனே! நண்பனே!
வெள்ளை மணல் மணிகளெல்லாம்
கோடை வெயிலுக்குள் எங்கள்
பகிடி கேட்டுச் சிரித்தனவே? குளிர்ந்தனவே?

தொந்தி வந்து நான் தொய்ந்து போனேனாம்
வாலிபத்தைக் கொண்டு வந்து
பள்ளிப் பிராயத்தை ஆத்மாவில்
ஊசி போடும்
நண்பனே! நண்பனே!

சுடப்பட்டோம் சுற்றமிழந்தோம்....
சுற்றி நின்ற நம் கோட்டைகள்
எல்லாம் எங்கே?

நாம் ஆள
நம்மைச் சுமந்த வீதிகளுக்கு
ஊரடங்குச் சட்டம் போட்டது யார்?

செல்ல முகமே செவ்வரத்தைக்குள் சிரிப்பெடுத்து
சொல்லித் தந்தாய் பள்ளியிலே நட்பை!

உன்னையும் என்னையும்
தீ மதிலாய்க் கூறு போடும்
அந்த அழுக்கான அரசியல் அழிந்தே போகட்டும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று துருவங்கள் கூட இணையும்
விண்ணிலே கோளங்கள் கூட
உறவு கொண்டாடும்!

மண்ணே வரலாற்றை வரைந்து
எங்கள் இதய நாரை இணைத்து
ஈழம் என்றொரு பெயர் கொண்டாய்!

வேறு வேறாய் இன்று ஏன் எம்மை
வேரறுத்தாய்?

வருமொரு நாள்
வடக்கிலே வீசும்
யாழ் மண்ணின் பனம் வாசம்
ஊட்டமளித்து உரம் கொடுத்து
வீசும் அந்த ஜீவக்காற்றை
நண்பனே நீயும் நானும்
சொந்த முகத்தோடு
சேர்ந்தே சுவாசிப்போம்!

அகரத்தை
அன்று அழித்து அழித்து எழுதி
அன்பை நாள் வர நாள் வரக் கூட்டி கூட்டி
பள்ளி விட்டதும் வரும் கனவில்
உறவைப் பெருக்கிப் பெருக்கி வளர்த்தோமே...

நானும் நீயும் எழுதியது
தொலையாத முகங்களின்
தொடர் நவீனமல்லவா?
ஏனின்று தொடர்பின்றிப் போனோம்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்ல நம் நாடே
எம் தேகத்தின் நிறத்தைத் தேர்ந்தெடுத்து
அதையே தேசியத்தின் சொத்தாய் அங்கீகரித்து
எம் உறவைத் தன் ஆத்மாவாய்க்
காலங் காலமாய்க் கடந்து வரும்
கன்னித் தமிழின் கருவறையே!

ஏன் எம்மைக் கருக்கொலை செய்தாய்?

உன் சொந்தப் பிள்ளைகளின்
தொலைந்த முகங்களைத்
தொலைவிலிருந்து கூட்டிச் சேர்ப்பாயா?

கூடிச் சேரும் அந்தத் தேசிய விழாவிலே
நாமொரு இனமாய்
வள்ளுவ நெறியின் வரைவிலக்கணமாய்
கூடுகின்ற வெளியெங்கும்
அன்பால் கூத்தம் செய்யும்
புதிய இனமாய் புரட்சி செய்வாயா?

நண்பனே நண்பனே
நாளை நாம்
கண்டெடுத்த நம் முகங்களோடு
வென்றடுத்த நம் கருவறையிலே

ஜெயம்!
ஜெயம்!
ஜெயம்!
என்று குரலெடுப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏந்தியே

நாடு எழுக நலமே செல்க..!
நாலுபேரும் வருக.! நல்ல காலம் என்க..!

தேவமுகம் கொண்டு வருக..!
ஒரு ஜனமாய் எழுக..!!!

தீபங்கள் ஏந்தியே
கோபங்கள் விலக்கியே
நாடு எழுக! நலமே செய்க..

ஒன்று கூடி வாழ்வோம்..
உண்மை வழி காண்போம்...

ஒரு சமுதாயம் இது எதிர்காலம்.

வகை வகையாய் வகுப்பவன் யாரடா?
மனித ஜாதி மண்ணில் ஒரு வகையடா..

உன்னத உள்ளங்களே
உண்மையின் ஊற்றுக்களே
எழுக!! எழுக!!

உங்கள் வருகையில் உலகம் புதிதாய்
உதிக்கட்டும் விழிக்கட்டும்...

பகை போகவே இருள் நீங்கவே
கதிர்கொண்டு வாருங்கள்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிதாய் ஒரு நதி பிறந்தது..
உங்களில் அது ஊறியது!

நீங்களே கூடுங்கள்.. உங்கள்..
நெஞ்சின் அலைகள்..
நேசத்தின் போரோசைகள்

சுத்தமான ஜனங்களே
சுத்தான மனிதர்களே..

ஒரு நீதி
ஒரு பெயராலே
ஒரு திசையிலே

வெல்லுங்கள் வெல்லுங்கள்
அதைச் சத்தமாய்ச் சொல்லுங்கள்!

உருகட்டும் உருகட்டும் மலைகளே...
உருவாகட்டும் உருவாகட்டும் ஓர் உலகம்..!!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எழில் பொற்காலம்

உங்கள் உதடுகள் பேசும்
உயிர்கள் துளிர்க்கும்
பாதங்கள் பருகின்ற தூசியில்
நாளை உறங்கிய உயிர்கள் எழும்பும்!

உம் முகங்களின் ஜோதி
விண் முகட்டின் விசாலம் தொடும்!

கோபம் விட்டீர்
சாபம் வெல்லும்
சாகா சரித்திரம் செய்தீர்!

வெல்லும் ஜெபமே
நில்லாப் பகையே
வெற்றி வரும்
ஒரு சொல் வரும்!

வேந்தர்கள் நாமென
நிமிரும் நாள் வரும்!

இல்லாமை இல்லை
இனிவருங்காலம்
எழில் பொற்காலம்!

அன்பே நம் வேதம்
அதுவே நம் மதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளரும் தமிழ் சாதி
வையகம் முழுவதும் ஒன்றாய்!!!

கூப்பிய கரமும்
கூர் மதியும்

வாழ்த்தும் நெஞ்சும்
வளையாத் தலையும்

கூடும் கரங்கள்
தேடும் வரங்கள்

எழுவது நாங்கள்
விழுவது பகையே

ஜெயம்!!! ஜெயம்!!!

கோடி தமிழினம்
ஒரு கொடி அதன் நிறம்
உங்கள் உதடுகள் பேசும்
உயிர்கள் துளிர்க்கும்!!!!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எழுக! எழுக!!

மனிதர் கூடுவார்... மனிதர் கூடுவார்..
ஒரே மார்க்கமாய் ஒரே எண்ணமாய்
தேவ மார்க்கமாய் தேடும் கூட்டமாய்
நட்பு நாடும் கூட்டமாய்
நாட்டின் நல்ல தோட்டமாய்
நீதி செய்ய நல்ல விதி நடக்க

நாளை வானம் நமதே நமதே..
காலை வெளிச்சமாய்..
தரை வெடித்துத் தலை நிமிர்த்தும்
பூமிச்சுடர்கள் பூப்பது போல்

ஒரு குரலில் ஒருமித்துப் பாட
பேருணர்வுத் தீயில்
பேரும் கொடுமை எரிக்கக் கூடுவார்.. கூடுவார்..

சாதி போச்சுதே
ஒரு முகமாய் நம் தேசம் விழிக்குதே..
புதிய தத்துவமாய்ப் பேருண்மை புரியவே..
பெரும் படை நடக்கவே
ஒரு முகமாய் நம் தேசம் விழிக்குதே விழிக்குதே!

பகைமை போகப் பஞ்சம் போகத்
திரளும் கூட்டம் தீயின் கூட்டம்
அவை தேவ விழிகள்
அன்பே அவை பேசும் மொழிகள்
நாடு எழுக! நல்ல நாடு எழுக!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாற்புறமும் நல்ல பேர் விளங்க
சீர் செய்யும் சிந்தை கொண்ட
பெரும் அலையென நாடு எழுக!!
சுத்தம் செய்யச் சுத்தமாய்ப் பேரலையோடு
பொங்கியெழுக!!!

## எங்கே நீ !

பெயரற்றவர்களுக்கு மாத்திரமல்ல
உனக்கு
எனக்கு
எங்கள் எல்லோருக்கும்,

மனித முகத்தில்
மானிடச் சாயலில்...

வெளிப் பகட்டுக்குப்
பின்னால் பிறந்தவர்கள்...

(வரை)இலக்கணமாக இல்லாமல்
ஒரு நிபந்தனையாக,

அந்த
முற்றுகைத் தகர்ப்பு..
பழமைப் பிடியை விலக்கிவிட,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதிமத வெறியை
அது தான்
அந்த
கர்ப்பத்தின் கனத்த வெறும்
போலித்தசைக் கட்டியை,

அதற்கு
உனக்குத் தெரியுமா?
நண்பனே
எங்கே அந்தப் பிரசவ நிபுணன்?

பூரண சுதந்திர மனிதர் என்று சொல்ல
எப்போது நாம் யதார்த்த நிலையில்
பொரிக்கப்படுவோம்?

நேசமான நண்பர்களே,
தூக்க(நடக்கும்)வியாதியிலிருந்து நாம்
விடுதலையடைவோமாக..

இப்போது நீ எங்கே?

நண்பா...

என் கண்ணாடியில் உன்
முகம் தானே தெரிகிறது,,,,,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டாயிரம் ஆண்டே இனிதே வா!

வா வா வளம் கொண்டு வா
சத்தம் செய்து சதிராடி வா
நித்தம் உலகம் புதிதாய்ப் புன்னகைக்க
முத்தம் தந்தேன் முழுவதும் அர்ப்பணித்தேன்

கீதம் நாதம் வருங்காலம்
பேதம் போகப் பொற்காலம்
ஒளியும் தெளிவும் நிமிஷங்களாக
உலகம் உவகையில் உருள வா!! வா!!

மாலைகள் மனிதங்கள் ஏந்தின
வறுமையின் சிறுமையின் சுவடுகள்
மடமையின் தீமையின் வாய்க்கால்கள்
விண்வெளிச் சிரிப்பில் புதுவெள்ளம் கரைத்திட

எல்லைகள் ஏதடி தொல்லைகள் தீர்ந்தன
துருவங்கள் தொடுகின்றன தூரங்கள் இணையும்
நட்சத்திரக் கண்கள் நிமிஷக்கால்கள்
விண்வெளி மனிதன் விளையாட எழுகின்றான்!

ஊளைகள் காட்டில் கூப்பிடும்
ஏழைகள் வர்க்கம் இலையென்றாகும்
குருவிகளுக்குக் கூடும் அருவிகளுக்கு ஊற்றும்
புதுயுகம் மானிடவெளியில் பூக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலையின் தானம் ஞானம்
மலையை வானம் கொஞ்சும்
சந்நிதானம் மக்கள் கூடும் வெளி
மூலஸ்தானம் சமாதான ஒளி
மலர்கள் இனி எல்லாம்
மனிதமுகத்தின் முத்திரையாகும்!

வா!! வா!!
புனித நதி நீர் புரண்டோடிடவே
பழமையின் பண்புகள் மீண்டும்
புதுமையின் பண்ணில் இசைத்திடவே...

வளரும் புல்லின் நுனியில்
வசந்தம் சொல்லும் சேதியில்
அரும்பும் உறவுகள் நரம்புகளில்
சமாதானம் எதிர்வரும் என்கின்றன!

போர்ச் சரித்திரம் பின்னாற் போகும்
கைகோர்க்கும் தேசங்கள் பின்னல் போடும்
தெய்வமொழி பேச அவை நேசக்குரல் நெய்யும்

பன்னீர் வாசமொழிகள் தூவும் வா!!
வருமாண்டே சந்தம் செய்தன காற்றில்
வண்டுகள் பொற்காலம் என்றே
குண்டுகள் எல்லாம் உருமாறும்
நீர் கொண்டு வரும் குழாய்கள்
கண்டுகள் உண்டு கொள்ள,

வா!! வா!! வருமாண்டே
மனிதம் தலையெடுக்கும்
சரித்திரம் தரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புனிதம் நிறம் கொண்டு,
மங்களம் தழுவும்
யுகத் தோட்டமே,
நிதம் ஒரு
மகுடம் சூட்டி,
நித்திய மணவறை வானம்
உண்மைக் கணங்கள் செய்தன,
உற்சாகக் காலம் உறங்கிட வா!!!!

பொன்மணி மண்டபம்
போலொரு நெஞ்சம்
அன்பு வேதம்
அதிகாலைப் பூஜை நேரம்
ஆனந்த அருவிகள் ஓரம்
ஊஞ்சல் செய்தேன் வாராய்!!!

யுகங்களில் குளித்தாய்
முகங்களை வடித்தாய்

மேகங்கள் கூட்டும் ஏழையின் கண்ணீர்- (கொதிநீர்)
உருக்கும் கோட்டைகள் தூணை

உயிரிற் கலந்து திசைகள் திரும்பி
தீயிற் தொடங்கி காட்டில் முளைத்து
பூமியில் சிறு பக்கம் எழுதி முடித்தாய்
வேதனையை ஒரு பக்கம் சுருட்டி வைத்தாய்..

எழுதப் போகும் மறு வரி
உழுத மனிதத்தின் புது உயிர்ப்பு
திருநாளே தினம் தான் அவர்
கனிக்கூட்டம் களித்தோட்டம் இனி..
வா!! வா!! வா!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெய்
நெடுங்காலத் தபம்..
இயற்றிய இசை மலர்
இரண்டாயிரம் ஆண்டே இனிதாய் வா!!

கண்ணீர்கண்ட மனிதன்
ஆத்ம முகவரியே வா!!!

தேசங்களின் தேவதைகள்
அதிசய யாத்திரையில்
சங்கமம் ஆகும்
திருக்கோயில் ஒளியே வா!! வா!!

உதயம்
தினந்தோறும் வாழ்த்துக்கள்
பாடும்,
வாழும் ராகம் பெருகியோடும்..
ஆருயிர் ரகசியம்
விளக்கும் ஆண்டே வா!!வா!!

பூவாசம் நாடும் வண்ணத்துப்பூச்சிக்கு
தாய்மொழி என்ன? நன்றி...

குயில்பாட்டுக்கு ருசி சேர்க்கும் இராகம்
காற்றின் கொடையல்லவா? நன்றி..

மழைநீர் வார்த்தை இடிகள் உரைப்பதும் நன்றி..
அழகிய வார்த்தைகள்...
இன்னிசைகள்..
நன்றி
அதற்கு
ஈடாகுமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீயாகுமா?
அற்புத ஆண்டே வா!!!வா!!

ஜீவன்கள் சூடும்
சுதந்திர கிரீடம்...
வான் தாய்மடி மீது
ஏகாந்தம் தலை வைத்திருந்தால்..
ஜீவன் பாதையில் படர்கின்ற வேகம்...
சமாதானம் சுமந்து ஆண்டே வருக!!!!

எனது கோயில் எப்போதும் திறக்க...
செல்வம் இன்பம் வாழ்க்கையில் தித்திக்க..
சொல் ஓவியம் தேனில் குழைத்தேன்..
நாமம் ஓதி ஆண்டே மயங்குகின்றேன்..
வா!! வா!!! வா!!!

பருவத்தில் புயலின் துளை காயம்
ஆண்டாள் றோஜா வனம் ஆகின்றதே
துரோகம் நினைவின்றித் தொலைகின்றதே
சோதனை யுத்தம் நடந்த பாதையிலே
சாதனை ரகசியம் இமைக்கின்றதே..
இரண்டாயிரம் ஆண்டே இனிதே வா!!

துணைவர் பார்வை சுத்தம்
தொடக்கம் வேர்வை மனிதன் பக்கம்
உழைப்புப் பாடலின் வரிகள் கோதும்
உப்பு மனசு சேற்று விளைநிலம் ஆகும்
இரண்டாயிரம் ஆண்டே வா!!!!!!
இனிதாய் ஆள எழுவாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இருளை ஏன் அழைத்தாய்!

நீ வரைகின்ற வடிவென்ன
கேட்கின்ற வரமென்ன
வாழ்வோடு போராடும் போராளி
ஊண் உண்ண உடல் அழித்தால்
ஊராம் உறவாம் உன் பேரையெங்கே தேடும்!

உணர்வுகளை ஏன் விற்றாய் ஊமையே பேசு!
உறக்கம் உனது கண்களைத் தின்னும்
உயிரைக் கொல்லும் இருளை ஏன்
உன் போர்வைக்குள் அழைத்தாய்?

நீ உன் உலகத்தை இழந்தாய்
பேரொளி தான் மறந்தாய்
நடமாடும் போது கால்களை விற்றாய்
முடமான போது முளைத்தால் முறிப்பேன் என்றாய்!

வேகத்தில் சோகத்தைச் சேர்த்தாய்
சோதனை நேரத்தில் தோல்வியைச் சேர்த்தாய்
மோகத்தில் நரகத்தை மணந்தாய்
தாகத்தில் பாவத்தைக் குடித்தாய்!

பரமனை மறந்தே பயித்தியமானாய்
நீ போடும் கோலம் நிலைக்காது
நிம்மதி அங்கே இருக்காது
ஓடும் உன் உலகம் நிச்சயமில்லை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன் கண்கள் உன்னை அன்னியமாய்க் காணும்
நிழலோடு பேசும் நிறமற்ற மனிதன்
நினைவுகள் உனை அடையாளம் காட்டும்
இரண்டானவன் நீ இனி இருளானவன்!

போதைக்குள் பாதையைத் தொலைத்தாய்
வாதைக்குள் வருடங்களை அரித்தாய்
இருளுக்குள் இன்பம் தேடி
அருளை இழந்தாய்

உனக்குள் உறங்கும் உண்மை விழிக்கட்டும்!
உயரத் தெரியும் கழுகைக் காணட்டும்!
காட்டின் காற்றாய்ச் செட்டை விரிக்கட்டும்!
நாட்டின் மூச்சாய் மையம் கொள்ளட்டும்!!!!

## இரவுக்குள் அழுகை

இரக்கத்தின் கண்களைத் தேடுகிறேன்
ஓ.........
இருளே என்றும் நீ கண்ணற்றாய்
இருதயமில்லா
இந்த இழி இரவுக்குள் அழுகின்றேன்

இரவைத் தொடங்க
இரை கொண்டு வரும்
குருவி கொஞ்சும்
பூவரசம் கூட்டினிலே ஒரு மஞ்சம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓ............

கூடி வரும்
முற்றத்துப் பூவரசுக் கிளையில்
குருவிகள் கூடும்..
கண் கொண்டவை கருத்தாய்ப் பேசும்!

ஓ............

நான் இரவை நனைக்கின்றேன்
உழுவை நிலம் போல்
உடல் கிழிந்து எங்கும் ஊனம்
நிலமே நிலமே
தண்ணீரோ கண்ணீர்?
அன்றிலிருந்து இன்று வரை
என்றும் நீ கேட்பது
என் கண்ணீரையல்லவா?

ஓ................

பாம்புகள் பக்கத்தே
பாய் போட்டேன்!

தேவாங்கு பரிகாசம் பண்ண
இரையற்ற இருள் கடிக்கக்
குப்பி விளக்கு...

தாங்க முடியாப் பந்தலிலே தூங்கும்
பாம்புப் பூடோல் காட்டி
றோசாப் பாத்திக்குள்ளிருந்து
வேருளியொன்று வெருட்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெடியோசையாய்க்
கேலியும் கேந்தியும்

ஓ.......

நான் இரவைக் கழுவிட
அழுகின்றேன்

கொடு சூட்டோடு
சூழ்ந்தது சுட்டது..
கொதிச் சுவாசம்
கொட்டிடும் புழுதி
வாரி என் மேல் இறைத்தது...
கடைசிச் சுவட்டை
முத்தம் போல்
மனைவிக்குப் பதித்துவிடுகின்றேன்
அப் புழுதியிலே...

ஓ.........
நான் இரவை நனைத்து
ஈரமுள்ள இருதயத்தைக் கர்ப்பம் தரிக்க
அழுகின்றேன்...அழுகின்றேன்....

நெருப்புப் போல்
வெறியர்கள்
தலை கீழாய்த் தொங்க
காய்ச்சிய இரும்புக் கோலால் விசாரணை
சீழ் பட்ட அந்த நெருப்பினால்
நாறியது இரவு...
மேலும் இருண்டது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓ.....

நான் இரவுக்குள் ஒலமிடுகின்றேன்
மானிடம் விழிக்குமென்று!

நான் என்ன கழிக்கப்பட்ட எச்சமா?

இல்லை...இல்லை..இல்லை....

இறுதி இருதயத் துடிப்பு
ஈன வலியோடு மட்டுமல்ல.....

அந்த அடங்கிய சுவாசம்,
இறுதியாய் இரவைத் தூய்மையாய்த் தொட்டது.
தூய ஆவியாய்த் துளிர்த்தது மீண்டும்.
இரவைச் சுட்டு
இருதயம் படைக்கும்

எழுந்தே தொடுவேன்
நெடுவான் கிழிப்பேன்
விண்ணில் வரும் கண்ணாய்

கதிர்க்கும் நட்சத்திரக் கும்பலில் ஒன்றாய்
கருணைக் கண் கொண்டே
இரவில் மிளிர்வேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இசை மீண்டும் இனம்பெற

அந்தக் காலங்களைக் கடவுளே கட்டளையிடுவீரே
எந்தக் கோலம் கொண்டாலும் கலையொடு கவி
இந்த நிலை இனி வர இசை மீண்டும் இனம் பெற
மீந்த வாழ்வெல்லாம் மேவும் ஞானக் கண் கொடுமே!

(தேவா ஞானக் கண் கொடுமே கண் கொடுமே)

என் மூச்சில் எப்போதும் நேசம் வீச
எழிலான தேசம் என்றும் அன்பைப் பேச
நெஞ்சைத் திரியாக்கும் நினைவை நெய்யாக்கும்
நெடு மேனியெங்கும் ஓடுமிரத்தம் கருணைவெள்ளம்

(தேவா ஞானக் கண் கொடுமே கண் கொடுமே)

வரம் தரும் தெய்வம் வராதிருக்குமோ
துயர் தீரத் துணை தராதிருக்குமோ
வரும்மோடி என்துயர் தான் நிசமோ
தரும் கோடி அதன்பெயர் பொய்யாகுமோ!

(தேவா ஞானக் கண் கொடுமே கண் கொடுமே)

அவர் அன்பானவர் என் நேசக் கருவே
தினம் உன்பெயர் உயிரில் எழுதும்
பரம் பெருளே பாரென்னைக் காரென்னை
எழுதும் என் கரம் தொடும்

(தேவா ஞானக் கண் கொடுமே கண் கொடுமே)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுவேன் காலைக் கதிரென
என் மனிதர் முகம் மீண்டும் காண்பேன்
தினம் மலர்வேன் நேசம் வீசும்
நெஞ்சம் நெருப்பாய் எரியச் சுடராய்

(தேவா ஞானக் கண் கொடுமே கண் கொடுமே)

தேவ தேவனே தேடும் ஞானப் பொருளே
என் மனமீது மாமருந்தாக உன் அருளே
பெரும்பொருளே தேடாதிருப்பேனோ
ஒரு வெளிச்சம் ஒரு பெயரே

(தேவா ஞானக் கண் கொடுமே கண் கொடுமே)

அன்பே அடைவேனே அரும்கடவுள் ஒன்றே
ஆதியெங்கே அங்கே நீரே
அந்தமென்றால் அங்கும் நீரே
அருமறையெல்லாம் நீரொன்றே

(தேவா ஞானக் கண் கொடுமே கண் கொடுமே)



## ஜீவ நீர்

மிக சுத்தமான மலரே
உன் மீது எனக்குப் பொறாமையாகவே இருக்கிறது.

எந்த வித ஒப்பனையும் இல்லை
நீராடலும் இல்லை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீ கதிர்க்கின்ற நேசம்
வீசுகின்ற வாசம்
பூசியிருக்கின்ற வர்ணம்

எவ்வளவு தாராளம் உனக்கு
மற்றவர் மகிழ உன் நிர்வாணத்தை
நீ பிறப்புரிமையாக்கியுள்ளதால்
உன்னில் ஜீவ தொடர்ச்சியும் தொடர்பும் ...
அங்குதான் ஆண்டவனின் இதயம் இருக்கின்றது!

சுத்தமான மலரே நீ
சுத்தமானவரின் சொத்தன்றோ?
அதனால் உன் இயல்பே
அழகாய் இருக்கின்றது.
அர்த்தத்தில் முடிகின்றது!

அங்கே தான்
ஒரு விஞ்ஞான தத்துவம்
ஒரு மெய்ஞ்ஞான தத்துவத்துடன்
கருக்கட்டச் சம்மதிக்கின்றன!

நீ உன்னுள்ளே பத்திரப்படுத்திய
அந்த நேசமுள்ள வித்தின் வருங்காலத்திற்கு
உன் வாசமுள்ள உழைப்பு உரமாக்கப்பட்டது!

உன்னைத்தான் இந்தப் பூகோளப் பரப்பு
மிக மென்மையின் பரிமாணத்தில் பிரசவித்திருப்பதால்

நீயே எல்லா வன்மைகளையும் கழுவக்காத்திருக்கும்
ஜீவ நீர்...
உன்னைப் பார்ப்பவர்கள் உனக்குள்
வேறாகிவிட்டால்
எப்படி உன்னில் நீராட முடியும்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலரே நான் உன்னில் கலப்பதற்கு
நான் என் வன்மைகளைக் களைந்து
கொண்டிருக்கின்றேன்..

## கறுத்த மச்சான் கள்ளச் சிரிப்போடி...

நேசம் கொண்ட நெய் நிலத்து
நெல் மணிக்கு நீர் கொடுக்க
நீள் வரம்பு நீண்டு நிறைந்திருக்க

காற்றடிக்கக் காகம் பறக்க
கனத்த பனம் பழம் மொத்தன மோத
போகம் பெரும் போகம்

செல்லமாய்ச் சிரி பெண்ணே
செவத்தப் பச்சை சேர்ந்திடிப்போம்!

சேதி சொல்ல செவியைக் கொடு
செவ்விளநீர் கோதிக் கிடக்கு
பச்சைச் செம்பட்டான் பழுக்கப் புடுங்கிப் போடு!

வயலுக்குள் காலைக் குளிர்
காலைக் குளிர் கூசுது கதிர்
தளிர் பட்டு வெடிக்குது மொட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வயலுக்குள் வாலைக் குமரி
செல்லமாய்ச் சிரி செவத்தப் பெண்ணே..

யாழ் நிலமெல்லாம் வாழ்த்த வாயெடுக்க
கட்டுவன் மண்ணிலொரு அடுப்புப் பிடியடி!

பொய்யர் புளுகரிலே
வாய்க்கு வையடி நெருப்பு
ஒன்றே குலமடி ஓலையை வையடி!

அக்கா தங்கச்சிக்கு
நல்ல தமிழ்ச் சொல்லைச் சொல்லிக் கொடடி!

காகம் கரையுது
கட்டுவன் மண்ணிலொரு அடுப்புப் பிடியடி!

கூரைக்கு மேலே கூவுற கோழியைக் கூப்பிடு கூப்பிடு..
வானம் சிரிக்குதடி வையகம் வெளிக்குதடி

ஒன்றே தேவன் உலகிற்கு ஒரு வெளிச்சம்
உத்தமர் பெயரை உச்சரி தினமே..

காங்கேசன் கடல் நுரையோடி
கறுத்த மச்சான் கள்ளச் சிரிப்போடி!

செல்லமாய்ச் சிரி செவத்தப் பெண்ணே
செவத்தப் பச்சை சேர்ந்திடிப்போம்

விருந்துக்கு வறுத்த பயறு
கொழுத்த கொழுக்கட்டை பிடித்தெடு!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காகம் கரையுது
கட்டுவன் களி மண்ணிலொரு அடுப்புப் பிடி
விருந்து வருகுது பகை ஓடுது..

தோட்டம் திருத்தியது நாமடி அதில்
நோட்டம் விடுவது யாரடி?

உந்த மண்ணில் உறைப்பது எங்கள் வேர்வையடி
எந்த மனிதன் பறிப்பான் எங்கள் சோற்றை?

கறுத்த மச்சான் கள்ளச் சிரிப்போடி
நாளை சரித்திரச் சாட்சிகளடி நாம்!

# ? கேள்விகள்... கேள்விகள் மட்டுமே!

ஓ..ஓ..
பெரிய கடவுளே, எங்கே நீர் இருக்கின்றீர்?
ஏன் உங்கள் பாதங்கள் அசைந்தன?
ஏன்..ஏன்?

ஒளியை நான் காணச் செய்வீரா?
இருளால் நான் சிறைப்பட்டுப் போனேன்...

எங்கே என் இனிய சங்கீதம்?
என்றும் ஜீவ வீணையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓ...ஓ...ஓ...
அந்தப் பிள்ளைகள்...

எனக்குப் பக்கத்தே..
எனக்கு மேலே..
யார்...யார்?

இது என்ன காலையா அல்லது சூரிய
அஸ்தமனமா?
எங்கே என் உலகம்?

இந்த இடிபாடுகள்
பாரமான திரை...
கற்களுக்குச் செவிகள் இல்லை...
என்னை மீண்டும் இயங்கச் செய்வீரா?

ஓ..ஓ.. தூசி நிறைந்து
சுவாசிக்க முடியவில்லையே
தொடக்கத்தைப் போல் நாங்கள் தூசிகளா?

எனக்குப் பாதுகாப்பளித்த
இந்தக் கூரை இன்று ஏன்
என் உயிரை நிர்மூலம் செய்ய நெருக்குகின்றது..?

நீர் உம் கையை நீட்டமாட்டீரா?
நான் இப்படியே கைவிடப்பட்டேனா?
நாங்கள் தொடக்கத்தைப் போல் தூசிகளா?

ஓ.. கடவுளே சந்தேகமில்லாமல்,
நீர் அந்த இரக்கமுள்ள இறைவன் தானா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாங்கள் பிள்ளைகளல்லவா?
நீர் அந்த ஒளியா?
ஆம் பிதாவே,
நீங்கள் அணுகமுடியாத அந்த ஒளியே.

நீர் தானே எங்களுக்கு ஜீவசுவாசம் தந்தீர்.
இருந்தும் நாங்கள் தொடக்கத்தைப் போல்
தூசிகளா?

நீர் அந்த மீட்பர்
பிதாவே கடவுளே
என்னை இரட்ஷிக்க மாட்டீரா?

யார் தன் கையைக் கொடுத்துதவியது?
எனக்கருகே ஒரு கை வருவதைப் பார்க்கின்றேன்
கடாட்சமும் கிருபையும் நிறைந்த இதுவே அந்த
உலகம்.

யார் அந்தத் துவாரத்தைப் போட்டது?
அளவிட முடியாத கடாட்சம்
ஒரு ஒளிக் கதிர்க்கற்றை என்னருகே வர..
நித்திய பிதாவே..
மீட்பர்..

கருணைமிக்க தகப்பன்..
ஞானத்தின் ஊற்று..
என் கடவுளே..
என் வெளிச்சம்..
தூய காற்று உள்ளே வீச..
அந்தத் துவாரத்தைப் போட்டது யார்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு வித்தியாசமான சத்தம்..
இதென்ன துளை போடும் இயந்திரமா?
இல்லை..இல்லை...
வாழ்வின் சத்தம்!

யார் அந்த ஓட்டையைப் போட்டது?

எனது அயலவன்?

என் ஆயுளை அதிகரியும்
என் ஆசைகளைப் பூர்த்தி செய்விராக..
நான் வாழ விரும்புகின்றேன்
நான் என் வாழ்வைப் போராட்டங்களோடு
சந்தித்தவன்!

ஓ... நேசமான தேவனே..
இது தான் நான் வாழ்ந்த இடமா?
அல்லது பரலோகமா?
அல்லது ஒரு கனவா?
வானத்தையும் பூமியையும் சிருஸ்டித்தவரே!

நான் தொடர்ந்து வெறுத்து வந்தவனா?
யார் அந்தத் துவாரத்தைப் போட்டது?!

ஓ...மிகப் பெரிய கடவுளே..
தூய ஆரோக்கிய ஆவியை அள்ளி
வழங்கமாட்டீரா?

யார் என்னைப் பரலோகப் பாதையில் நடத்தியது?
நான் மன்னித்த கடன்காரனா?
அல்லது நான் தொடர்ந்தும் நசுக்கிய அந்நியனா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யார் அந்த அமுதத்தைக் கொடுத்தது?
அந்த அன்பு செய்கையினாலே
பெரிய கடவுளே உம்மைச் சிருஷ்டித்ததே!!!!

அந்த உதவிய கரங்கள்
புதிய வானத்தையும்
புதிய பூமியையும் என்னுள்ளே சிருஷ்டித்ததே
மனிதர்களுக்கு உதவுவதற்காய்...

விவரிக்க முடியாத அதிசயமே
உம்மைத் துதித்துப் போற்றுவதற்கு...
நான் தூசியல்ல தொடக்கத்திலுள்ளதைப் போல்...

ஓ..ஓ...நீ என்னைக் காக்கக் காத்திருந்த குழந்தை
- என்
- வல்லமை
- சத்தி
- மகிமை
- மனதுருக்கம்
எல்லாம் அறிந்து கொண்டாய்
உன் அயலவனைக் கனம் செய்தாய்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாட்டுப்படலாமோ?

சுதந்திரம் தேடும் சுந்தரியே
நல்ல விடுதலையை
நகை ஆசையோடு
தங்க விலங்குக்குள் தவிக்கவிடலாமோ?

சரித்திரம் அறியாக் குலமகளே
புத்தகக் கட்டுக்குள்
உன் விடுதலையுண்டு கண்டுகொண்டாயோ?

நல்ல சாத்திரம் கல்லாப் பெண்ணே
நாளை வெல்லப் பிள்ளை பெறுவாயோ?

எப்போதும் இல்லை என்பவளே
உலகம் உண்டெென்பதைக் கண்டுகொண்டாயோ?
உன் பகட்டு மாயம்
ஒரு முதிர் வெளிர் சாயம்

நாட்டு மானம் நிறைநாட்டும் நீ
மாட்டும் வளையலுக்குள்
மாட்டுப்படலாமோ?

காசு கண்டா கதவே நீ திறப்பாய்?
நகை நட்டு நாலும் கேட்டா
நீ வாசற்படி போட்டாய்?

பட்டுப்புடவைக்குள் வாழும்
பகட்டுப்புண்ணே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போர் பூமியிலே சிலை
நார் வேண்டி
அவன் மூளைக்குள் தங்கவளையலுக்கு
புடக்குகை மூட்டலாமோ?

ஜெபிக்கின்ற பெண்ணின்
மாலைமணிகள் ஒரு சொர்க்கத்தை உருட்டாதோ?

இச்சிக்கின்ற இல்லாள் இதயம்
ஒரு சபிக்கின்ற சாத்தானின்
வசமாகாதோ?

வருகின்ற பிள்ளைகளுக்கு
வசையாகாளோ!

## மனிதர்கள் நாளை பிறப்பார்கள்

புனிதர்கள் புன்னகைப்பார்கள்..
புத்தகம் போல்,
புது மலர் போல்,
நித்தம்
ஜொலிப்பார்கள்!

மனிதர்கள் நாளை
தேவர்களாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்குள்
கதிர் கொடுப்பார்கள்,

வென்றிடும்
ஒரு
சரித்திரம்
தருவதற்காய்,

மிளிர்ந்திடும்
பெரும்
சான்றாய்,

புனிதர்கள்
போல்
மனிதர்கள்
நாளை
புன்னகைப்பார்கள்,

ஒரு வேதம்
நாதமென
ஓதிட
நாளை
மனிதர்கள் பிறப்பார்கள்..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மிதக்கின்ற கடமைகள்

பழைய பள்ளிப் படிப்பகப் படியேறி
படிக்கப் புத்தகம் தேடலானேன்

நாளொரு நவீனம் நடைமுறையல்லவா?
வித்தியாசாலைக்குள் பிதுங்கிய விழியோடு
பிச்சைப்பாத்திரமேந்தி எண்ணெய் முகத்திலே
ஏக்கங்கள் வழிய ஏழை மழலைகள்
புத்தகங்களுக்குப் பதிலாக புத்திரர்கள் என்றால்..?
புதினமில்லையா..?!!!!

ஓ... என் இனிய பாடசாலை
இது எப்படி...
இதயம் இடிந்து குழம்பிப் போயிருந்தேன்
ஒரு முட்டுப் போல் உன்னில் இணைத்து ...

பொச்சிலிருந்து நாருரித்தல் போல்
கடினப் படிப்பு
கனவிலும்
ஆத்மாவுக்குள் அசைந்தாயே!

ஏன் தயங்கவேண்டும்?
உள்ளே சென்று பார்ப்பதற்கு..
அடித்தளத்தில் கூடவா பள்ளிக்கூடமே
இப்படி எல்லாம் இடிந்து
இருள் அடைந்து..
விகாரப்பட்டு வெறுமையாய்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்தகங்கள் எங்கே?
எல்லாமே இழந்து
வெறுமைக்குள் ஏன் சென்றாய்?
குழப்பத்தின் குடியாய்...
தெளிவின் ஒளியே நீ ஏன் இப்படி?

கடவுளே
தன் நெஞ்சுக்குள் தத்துவம் கடைந்து
பிஞ்சுகள் எம் தலையில் அபிஷேக எண்ணெய் பூசி..
ஒளியின் வீடு தலைகீழாகி விட்டதே..

இதென்ன இவ்வேளை..? திடீரென்று..
நிலச்சரிவு !!!!
மூடிப்போட்டது முழுதாய் என்னை..

ஓ..ஓ..
முற்றத்தின் மஞ்சற் பூவரசம்
பூவைப்பார்க்கவேண்டுமே..
எங்கே அந்தக் கதவு?
வேப்பம் படிக்கட்டுகள்?
சூரியன் முத்தமிடும் முற்றம்..
விளையாட்டு மைதானம்
பார்க்க முடியாத பரலோகமாயிற்றா?

தெய்வம் போல்
தோண்டி எனை மண் சரிவுக்குள்ளிருந்து
இழுத்து எடுப்பது யார்?

அங்கே..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதல் அறிந்த
ஆசிரியர் மண்வெட்டியுடன்...

வெளிச்சம்..
புன்னகையுடன்
என் ஆசிரியர்
வெள்ளை வேஷ்டி சட்டையுடன்
கடமை தவறாத ஆசிரியர்
..குனிந்து நின்று ...குறத்திகளே கேளும்....
சோர்ந்து போகாமல் சொல்லித் தந்தவர்

வெளியில் ஒளியில் தெரியும்
அவர் எவ்வளவு நல்லவர்.

## △ முப்பரிமாணம்

விண்ணிறைந்து வைர மணியாய்க்
கொட்டிக் கிடந்த நட்சத்திரங்களைக்
கூட்டியள்ளிக் கொண்டன விடியலின் கதிர்க்கரங்கள்!

முத்துக் குளிக்க புல் நுனிக்கு
முத்தம் கொடுக்க முதுகு வளைக்கும்
முற்றத்திற்கு வரும் இளம் காலை
இரை தேடக் கலைத்தால் இழிவில்லை!

இதோ எங்கள் நாயகியும் எழுந்தாள்
சிறகை விரித்தாள் சிறிது கொக்கரித்தாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுபட்டன பஞ்சுக் குஞ்சுகள் விழித்தன
கொடுத்தன எல்லாம் குரல்கள் ஒன்றாய்ச் சேர்ந்து
கிக்கிக்.... கிக்கி.....

பட்டுப்போர்வைதான் பச்சைப்புல் வெளி
படைபணியென பிஞ்சுகள் குஞ்சுகள்
செல்கிறாள் வெல்வாள் முன்னே
நிமிர்ந்த தலை நாலு திசையும் நாண
பெட்டைக்கோழியல்ல நாண
தளபதிகளே வாருங்கள் என்னிடம்
வீரம் வரும் போர்ப்பயிற்சி பயில..என
செல்கிறாள் தலைவி சீற்றம் திரளட பார்வையோடு!

பின் வாங்கிய சிறும் நாகம் சொல்கிறது
குட்டிகள் கண்டதும் கோழியின் மூச்சில்
விஷம் வெல்லும் வீரம் வந்தது எப்படி?

குட்டிகள் போட்டதும் கொத்திக் கலைக்கும்
ஊரும் பாம்புக்கு உலகம் புரியுமா? அது
ஊட்டி வளர்க்கும் தாயின் நேர்த்திதான் உணருமா?

வீரம் என்பது முட்டி மோதித் தீண்டும் வெறியா?
கடமையைக் காக்கும் உணர்வில்
கனலாய் மூண்டே எழுந்து
அகிம்சை நெய்யில் அவிந்து
தியாகத் திரியில் தூண்டி
ஓங்கும் ஒளி தீபம் வளர்க்கும் ஒளியல்லவா?

வகை வகையாய் எங்கும்
களஞ்சியக் கட்டுடைந்து கொட்டினாற் போல்
சேதனச் சேறு சேர்ந்தது கோழி சேமமாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கீழ் வான் காட்டிக் கேட்டது கிரிக் குஞ்சு,
கீழ்த் திசைதான் செந்நிறம் தான்
காலை வேளை தான் முன் மாரி தான்
சொல்லிக் கொடுத்தாள் செல்லக் குஞ்சுகளுக்கு

நிறம் அறிந்தன நேரம் தெரிந்தன
பருவம் புரிந்தன உணவோடு உண்டன உலகை
பாசமுடன் புகட்டினாள் பாலகருக்கும்
பெரு விஷயம் புரிதல் விநோதமில்லையே?

குப்பை மேட்டில் குடும்பம் கோலோச்ச
சேதனச் சேறு அள்ளி வழங்கியது
உச்சி வெயில் வந்தது
உலகம் களைத்தது உணவு தேடி
வானம் கருத்ததா?
வில்லன் பருந்து வந்துவிட்டான்
பார்த்தது கோழி பர பரத்தது
சிறிச் சினந்து வெடித்தெழுந்தது!

வில்லென வாளென நகத்தையும் சொண்டையும்...
விறு கொண்டே செட்டையைக் கேடயமாக்கிச் செறு
முனைக்கு...

பயந்த குஞ்சுகளைச் செட்டைக்குள்
சூடு கொடுத்துப் பருந்தைப் பார்த்துப்
பல்லிளித்தது...

ஈனமாகக் காற்றோடு ஒரு குரல்
எம்மினத்தின் ஏக்கக் குரல்..

வரி வரியாக முள் எல்லை போட்டு
வழியைத் தடைசெய்து வலியவன் போட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலியை மீறிக் குரல் கேட்ட
திசை நோக்கிச் சென்றது குடும்பமாய்க் கோழி!

கண்டது அங்கே வெருண்டது உள்ளே
வலைக் கூட்டுக்குள்ளே
தீனிக்குத் திண்டாடும் திக்கற்றோர்
திகைத்தது தீயென வேகமானாள்

நக்குண்டு நாவைப் பின் கொண்டு
செத்துண்டு வாழ கிறும் நகமில்லையோ?
கொத்துண்டு பெருகக் காடும் மேடும்
காய்ந்து கருகிப் போச்சோ?
மேய்ந்துண்டு வாழ சொண்டென்ன செத்துப்
போச்சோ?

சீ... சீ...
தாயின் சீற்றம் கண்டு
கேள்வியொன்றோடு கொக்கரித்து வந்தது
முட்டையிலிருந்து முந்தி வந்த செட்டை அரும்பும்
சிவப்பி

"படம் காட்டி விஷம் கொட்ட விரியன்...
பார்த்தோமே வட்டமிட்ட பராந்தை...
காலையிலிருந்து மாலை வரை இரை தேடி
இளைத்தோமே?
பாரம்மா அங்கே மலை மலையாய் உணவு
உலகம் அழியினும் அவர்க்கேது ஆபத்து ..?

வெட்டும் வாள் போல் ஒரு குரல் எழுந்தது
கூண்டிற்குள் எரிமலை குமுறுமானால்...
கொதி குழம்பை அள்ளி வீசுமானால்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவப்பன் தான் எங்கள் நாயகன்
சொண்டில் சுதந்திர வைரம்
செவப்பில் எரிமலைக் குழம்பு
கூண்டின் வலையை உருக்கிடும்
செந்தணல் பார்வை சிவப்பன் தான் சீறியது:

"பண்ணைக்காரன் பிறமொழிக்காரன்
அவன் பேச்சு அறியோம்
அவன் குறியென்ன குறித்து வையடி செல்வம்
எங்கள் விசாவைக் கேளடி
வீசும் காற்றை யாரடி கொள்ளை கொண்டது?
நேற்றைய நண்பர்கள் மூத்த நண்பர்கள் எங்கே?
உயிர் என்றும் போகும்
சுதந்திரம் என்ன விலையடி பெண்ணே சொல்லடி?
காடும் மேடும் யாருக்கடி?
யாரெம்மைச் சிறைப்படுத்தக் கூடும்?
செவ்வானம் சிவப்பதேனடி?
விடியலைக் கூப்பிடுவது நாமடி...

கொடியவன் கையில் கொள்ளை போனது
உயிரின் அடையாளம் சுதந்திரம் தானடி
கூட்டின் சுவாசம் சிறையின் சோறு
வேண்டுவது யாருக்கடி ...?

கொக்கரித்து இன்னொரு குரல் இடைமறித்தது
நிறத்தை மறந்த நிலன் தான்
இங்கே என்ன குறை கண்டாய்?
இழிவென்ன இங்கே?
வாழும்வரை புண்போம்
பகையில்லைப் பாடில்லை
பண்ணைக்காரன் வாழ்க..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துதி பாடி அது முடிப்பதற்குள்
கூட்டின் கதவு திறந்தது
கொடிய கரமொன்று நுழைந்தது...

பண்ணையன் கையில் பந்தக்காரன்
கழுத்தை இறுக்கியது கை
நிறுத்துப் பார்த்தது நிலைமை
" ரசம் ஒன்று வைக்க நல்ல பதம்"

தக்க தருணம் பார்த்த சிவப்பன் சிறகடித்தான்
சிவப்பு வானில் சிரிக்கும் சிவப்புச் சூரியன்
தன் கதிரால் அவன் கழுத்தில் தங்க மாலை

சிவப்பியும் சேர்ந்து நடந்தாள்
நகங்களும் சொண்டும்
விரிய சிறகும் என்று வரும்
எங்கள் விடுதலையை அவை என்று உறுதி செய்யும்?

எங்கள் நாயகி
ஏற்றிய மூச்சு
இளசுகள் சரீரத்திலே
உயிரில் சூடேற்ற
ஒரு பகல் உற்சாகமடைகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முரண்படும் முடங்கள்

வாகனங்களுக்கு வக்கற்ற வன்னிப்
பழம் வீதியிலே ஒருகல் இருந்தது
அசைந்து கொண்டு அதனருகே புல்
வளர்ந்திருந்தது.

இரண்டும் நெடுநாளாய்ப்
பக்கத்து வீட்டுக்காரர் போல்
தமக்குள் வார்த்தைகளால் திட்டாமலும்
ஒருவரையொருவர் திட்டுப்படுத்தாமலும் இருந்தன.

மிக மறைவில் அந்நியன் போல்
முள்ளொன்றும் அக்கறையின்றி அயர்ந்துகிடந்தது.

நீண்டநாட்களாகி விட்டன
ஒருவர் மீது ஒருவருக்கு அக்கறை வந்து விட்டது
முள் கல் புல் மூன்றும் மூன்று கோணத்தில்
முரண்பட்டு முனகிக் கொண்டன.

ஒவ்வொன்றும் ஒவ்வொருநாளும்
படுத்துக் கொள்ளும் முன்னும்
நித்திரையிலும் விழித்துக் கொள்ளும் வேளையிலும்
வேண்டாத கண்ணில் வேதனைக் கனவுகளை
வேண்டுமென்றே கற்பனை செய்தன.

தம்மை மறந்து அடுத்தவர் தரத்தில்
தமக்குத் தாமே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீண் கதைகளைச் சாயமிட்டுத்
தம்மைக்காயப்படுத்திக் கொண்டன.

எப்படியும் காயப்பட்ட எண்ணங்களைக்
கலவரத்தில் கக்கி விடத்
தகுந்த நேரத்துக்குத் தவமிருந்து
வசைபுராணத்தை நீட்டி நீட்டி வளர்த்து
வக்கனை அத்தியாயங்களை அடுக்கி அடுக்கித்
தம் நெஞ்சையொரு யுத்த பிராந்தியமாக்கி
கொல்லும் மொழியிலக்கணங்களை
இலக்குகளை நோக்கி இயக்கிக் கொண்டன
முட்டுப்படாத முரண்பாட்டுப் போர்கள்
அப்படியே இருக்க

வாகனங்களுக்கு வக்கற்ற அந்தத் தெருவில்
வருகின்ற வெறுங்கால்களைப் பொறாமையோடு
பொல்லாத முடமான மூன்றும்
அடிக்கடி முகத்தை முடிக்கொள்ளும்.

என்றும் இந்த மூன்றும்
அந்த விடயத்தில் ஒரே இலக்கியத்தை
ஒரே இலக்கணத்தால் ஒத்த அட்சரங்களால்
ஒரே மொழியில் யாத்துக் கொண்டன.

இயங்கும் கால்கள் எல்லாம்
இவற்றிற்குப் பொது எதிரியாகின.

அந்த மூன்றும் கால்களைக்
கடிக்கவே காத்திருந்தன!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவனுள்ள கால்களின் காயம்
அதன் ரத்தம் சத்தம்
இந்தப் பொல்லாத
காய்ந்த காலற்ற ஊமை ஊர்ப்பரப்பின்
உல்லாச ஊனங்களுக்குத் தேவைப்பட்டன!

இந்த ஜீவனுள்ள ரத்தத்தினை உறிஞ்சிக்கொண்டால்
மூளை முளைந்திடுமோ? முரண்பாடு போய் விடுமோ?
இதயம் வந்திடுமோ?
கால்களின் ரத்தம் அதைக் கர்ப்பமிடுமோ?
ஓடும் கால்களுக்கு ஒத்தாசையாவாரோ?

ஆனாலும் வெறும் கால்கள் கமத்தை நோக்கின
செருப்புக் கால்கள் பள்ளி சென்றன புல்லுச்
சினந்து கொண்டன
சப்பாத்துக் கால்கள் பின்னர் கல்லூரி சென்றன
கற்கள் கடிந்து கொண்டன

பூட்ஸ் கால்கள் இராணுவ முகாம் சென்றன
முற்கள் முகம் கோணிப் போயின
தொடர்ந்து இன்னமும்
வெறும் கால்கள் இந்த வீதியில்
கமத்தை நோக்கி நோக்கிக் காய்த்துப்போய் விட்டன!

அந்த மூன்றும் இனி மட்டம் தட்டப்பட
சில இயந்திரச்சில்லுகளின் புரட்சித் தடம்
பதியப்பட இனிக்காலம் வந்துவிட்டது!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் ஏன் மரணிப்பதில்லை?



நான் வான் வரை விரிந்து
அப்பாலும் எண்ணத்தில் விரிந்து மேலும்
செல்கின்றேன்
ஆழ் நதி அலைக்கு கைகொடுத்து
விண்ணின் மதியைத் தாங்கிச்
சுடரும் ஜோதிச் சூரியனோடு கதைபேசி

உருவெடுத்தேன் ஊடுருவி
உடைந்தே உருக்குலைந்த உள்ள
எரி சிறை உடைத்து விடுதலைப் பெயரிட்டு

விண்வரைந்து விரிந்து
எண்ணத்தில் விரிந்து மேலும் செல்கின்றேன்
பெரு மலை முகடுகள்
எரிமலை வாய்கள்
எல்லாம் எள்ளாய்ப் போகிட
விரிகின்றேன் மேலே......

உயிர் கெடு விடமோ
ஜீவ பாலோ
எதுவுமே
நான் அருந்தவில்லை,

எண்ணத்தில் விரிந்து
விண் மதியைத் தாங்கி
மேலும் விரிகின்றேன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விண்ணோ மண்ணோ
வித்தியாசமில்லை
கண்கள் காணும்
விண்ணில் மின்னும் மணிகள்
விளையாட்டுப் பந்துகளாய்த்
தோன்றும் துகள்கள் தொட்டு
விண்வெளி கடந்து மேலும் விரிகின்றேன்...

விளையாடிடும் தங்கள்
விண்முற்றத்தில் கோள்கள்
ஒன்றையொன்று துரத்தும் ஓயாது
ஒருக்காலும் தொடாமல்

விண்மதியைத் தாங்கி
சூரியனோடு சொற் பரிமாறி
விரிகின்றேன்,
ஜீவன் கெடு விடமோ
ஜீவப் பாலோ தொடாது,

வெடித்து உயிர் குடிக்கும்
குண்டின் திசை திருப்பி
மரணத்தின் முனையை முறித்து

கொல்லும் கைகள்
இல்லை இனி மேல்
எழுகின்றேன் மேலே

என் குரல் என்றும்
மனிதம் தான்...
மனிதம் தான்...
அங்கும் எங்கும்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விண் வரை விரிந்து
மண் வரை தாழ்ந்து
விதை முனை வாழ்த்தி

உள்ளச் சிறை உடைத்து
எரி இதயம் எடுத்து
விடுதலைப் போரிட்டு
விண்ணில் விரிகின்றேன்.

# நேசம்

தேடிப் படிக்கவேண்டும்,
நேசம் நாளுமே!

ஓங்கி வளர வேண்டும்,
உள்ளே பெரும் உலகம்..
உங்களில் அது வளர
உன்னதர் பாதம் போற்றிடுவோம்!

உலகம் உங்களில் துலங்கும்
மின்னும் மணிகள் நீங்களே..

நேசத்தைச் செய்வீர் நல்ல வாசத்தின்
நெஞ்சின் பாலகர் நீரே..

நின்றிடும் பாலகர் நீவிர்
நாளை நல்ல உலகை
வென்றிடும் போர் வீரர் தாமே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெய்வப் போர்வை நெய்கின்ற வண்ணம்
பூமியில் அன்பு இழைகள் இழைப்பது நீங்கள்,

ஓடி உலகெங்கும் விளையாடி
சமாதானச் சிறகால் பறந்து
அந்தர வானில்
அதிசய வெளியில்
அற்புத தொனியில்
அழகான கவியில்

சித்திரப்பாலகர் சிந்தையில்
கோலம் கிறிக் கோடுகளாய்ப் போடுவது
நட்பு..நட்பு.. நட்பு..

ஊட்டம் தரும் உலகின் விருந்து
உன்னதர் உண்டிட உம்மிடம் கேட்பது
நட்பு.. நட்பு.. நட்பு..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஓ... பிரியமுள்ள யாழ்ப்பாணமே!

ஜீவ சாரமே
விந்தின் மடியே
சந்ததியின் கர்ப்பமே
யாழ் அம்மா வணக்கம்,
உன் மீது
காலணி சாத்தான் காறி உமிழ்ந்த
குட்டிச் சாத்தான்,
இரத்த வெறி கொள் கோட்டை
கர்ப்பத்தைப் பொசுக்க அதிலே
நிரந்தரமாய்க் கொழுவிட
பொரிக்குது குண்டுகளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது
சுற்றிய அகழிக்குள்
கொட்டிய வியர்வை
நிறைந்திடக் கண்டாய்,

கல்லோடு தசையாய்க்
கட்டிய கோட்டை,
மனிதம்

தொங்கிடத் தூக்குமரம்
வதையறைகள்,
சதை சிதையறைகள்
நிந்தனைப் புண்கள்,
புலம்பல்கள்..இரத்தச் சொட்டுகள்...
காலணிப்
பசாசின் ரத்தப்பாதைகள்
புண்ணான சரித்திரங்கள்
ரத்தச் சுவடுகள்
ரணமான பாதைகள்
கூட்டைக் கொழுத்த
அக்கினியை ஈனும்
பசாசின் கற்பம் தான்
இருண்ட குகைகள்,
எங்கள் கூரைகளைக் கொளுத்தும்
நரகக் கிடங்கே..
எரிமலையின் அகல் வாயே...
அனாதைகள்...
விதவைகள்...
அகதிகள்...
என்றே திருக் குழந்தைகள்
திருநாமம் தினம் விகாரப்படுத்துகின்றாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

58..77..83...87...
வெறும் எண்களல்ல
வேதனைப் புண்கள்
கொதி தார்..
யாழ் தேவி...
வெலிக்கட...
வீதிகள்...

மனித வேட்டையின் வயல்கள்
ரத்த அபிஷேகம்...
தொங்கும் சடலங்கள்
மிதக்கும் சடலங்கள்
அழுகும் சடலங்கள்
எரிந்த சடலங்கள்
நாற்றம்...நாற்றம்...நாற்றம்...
புகை..
சாம்பல்சுவடுகள்...

ஓ...தூய்மையான என் தாயே
இரக்கமற்று இங்கே நீண்ட வழக்கில்
இலக்கமிட...
எங்கள் கூட்டைக் கொளுத்தித் துரத்தக்
கொடிய எரிமலையைக் கொண்டு வந்தது யார்?

ஓ...இரக்கமுள்ள அம்மா..
உரமுட்டும் உன் நெஞ்சு வற்றிவிட்டதோ?
மாம் பழரசம் ...பலா.. நெல்
வயல்கள்..பனை..தென்னை..?
கெட்டழியக் கொளுத்தியது யார்?

அம்மா..
உன் பொற் துகில் கட்டி
விழித்தெழுந்திடுவாய்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடி கொண்டெழுந்திடுவாய்
எரிமலை மீதல்ல
கொடியவர் கோட்டை நொறுங்கிடக்
கோபுரமீதில் வெற்றி சிறந்திடுவாய்...

புலம்பலில்லாப் புதுப் பகல்கள்
உதயமாகுது அங்கே..

வெடியோசையில்லா இரவுகள்
வெகு தூரத்திலில்லை...

நேசமுள்ள தாயே உலக
சமாதானம் எழுகின்றது!

எங்கள் இதயத்தின் ஓசை ஒலிக்குது,
கடின யாழ் மண்ணின் நிலங்கள்
களிக்கின்றன...சமாதானம் எனும்
அதிர்வினால்
விடுதலை..விடுதலை..

---

ஒல்லாந்துக் கோட்டையும், பேரினவாத அரசின்
கொடுமையும் இங்கே படமாகச் சித்தரிக்கப் படுகின்றது,
மூலம் ஆங்கிலம், ஒரு பொருட்காட்சிக்காக
எழுதப்பட்டது,
வர்ணனைகள் நீக்கப்பட்டு
கவித்தன்மை குறைந்து காணப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஒரு ஓட்டாத பயணம்

என் தந்தை ஒரு நாள் தனது படகைக் காற்றின்
திசை வழியே செலுத்திச் சென்ற வேளை
ஒரு தேவதை சொர்க்கங்களின் சுரப்பியென
யுவனச் சுந்தரங்களெல்லாம் சூடிக் கொள்ள

தேவலோகம் தேடி வந்து சமுத்திரமதில்
புன்னகை பூத்து நின்றது
கேட்டது விண்ணின் மணிகளின் ஓசையா?
மின்னி மறைந்தது மேலோகம் மறைந்தது
ஒரு கணத்தில் எல்லாம்
நடந்து முடிவடைந்து விட்டன...

ஆனால் மீண்டும்
சூழுறும் கடலைச் சுற்றிச் சுழற்றும் காற்று
காற்றின் திசை வழியே ஓடம் சென்றது.

தந்தையென்ன மந்திர தந்திர வல்லுனரோ?
எண்ணிய மாத்திரத்தே பெண்ணும்.....
அழையா விருந்தாளி அக் குழந்தையும்......

அலையும் படகில் தூக்க உடையோடு
விழி நிரம்பிய விரகதாபத்தோடு விதவை
கூப்பிடப் பெயர் அறியாக்
கூழைக் கேட்கும் குழந்தையொன்று.....

ஓ.... பரிதாபம் பாலூட்ட
தாய் மார்பற்ற தனித்துவிட்ட பிள்ளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தத்தெடுத்துக் கொண்டார் அதனை
கட்டிக் கொண்டார் அவளை!

காற்றின் வழியே ஓடம் செலுத்தக்
கற்றுத் தந்தார் அவர்
தேவை தனையும் நானறியத் தினம் எனைக்
கட்டளையிட்டார்

ஆனால் தேவையின் தாயின்
அவள் ஆசைகள் ஆயிரம்
அவள் தேவைகள் தேடிக் களைத்தேன்
தினமும் மாறும் எப்போதும் துரத்தும்
வலியில் வீழ்ந்தேன் வலியே இழந்தேன்
அவளின் பாதை அலையும்
அடிக்கடி தொலையும்
தேவையின் தாயின் திசையில் சென்றேன்

வான் வெளி திறந்ததோ?
வந்ததோ விண்மண்டலம் ?
வந்தனள் தேவதை வாய் மலர்ந்தருளினள்
அன்பு மகன் நீ என்றனள்
சுற்றியது ஓடம்
விட்டது தொற்றியதோர் உறவு
விளக்கம் பிறந்தது
நான் சுற்றுகின்றேன் சுற்றுகின்றேன்...

காற்றோடு இழுபடுகின்ற உடற் தேவைகளின்
தாயோ
நீயே என்றும் என் நித்திய மகன் என்று செப்பினள்
அண்டப் புளுகு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலையும் படகில் அலையின் நடுவில்
அவதியின் ஆசையின் வேகத்தின் சுழற்சியில்
ஓடும் படகில் ஓடும் உறவில் ஒட்டாதவள்..

சத்தியத் தாயோ
விண்ணின் பரப்பில் விளக்கம் கண்டு
விளையும் பெரு சுத்த சுதந்திரத் தேவதை
சொன்னாள்
செவியில் விழுந்து ஆவி அசைய:

நிறைவான நேச மகன் எல்லோரிலும் நீ என்றாள்



## பறப்பதற்கு ஒரு (நேசவுத்) தறி

முற்றுகை முகம் முறித்தே முழுவதும் வெல்வோம்
கடினத்தைக் கடந்தே வந்திடும் முளைகள்
காயங்கள் நாளை கனியின் சோலை
காரிருள் கடையும் கைகள் கதிரவனே
வெல்வோம் வெல்வோம் பூகோளப் புதுப்பரப்பு...

எல்லைக் கோடுகள் எங்கும் இல்லை
இருள் உலகம் இனி இல்லை
நேசம் நோக்கிப் பறப்போம்
தேசம் எங்கும் நேசம் நெய்வோம்
வெல்வோம் பூகோளப் புதுப்பரப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலம் ஒன்று கிளைகள் வேறு
நேசம் நோக்கிப் பறப்போம்
தேசம் எங்கும் நேசம் நெய்வோம்
வெல்வோம் பூகோளப் புதுப்பரப்பு

நிலம் ஒன்று கிளைகள் வேறு
ஒரு பூமி மானிடம் அதன் வாசல்
நேச வலையின் தறிகள் நாம்
வேற்றுமை வெறும் சாயம்
வெல்வோம் வெல்வோம் பூகோளப் புதுப்பரப்பு

வெறுப்பு முச்சுக்கள் நம் காற்றில் இல்லை
மானிடவேலின் கூர்கள்
வேதனைப் புண்களின் வேர்கள்
எங்கும் ஒரு முகம் இனி எங்களுக்கும் அந்த முகம்
வெல்வோம் வெல்வோம் பூகோளப் புதுப்பரப்பு

சரித்திரம் சுட்டது எம்மை
தீயில் முளைத்தவர் நாங்கள்
எங்கும் நாங்கள் நீதியின் பொது முகங்கள்
வெல்வோம் வெல்வோம் பூகோளப் புதுப்பரப்பு
ஒரு கீதம் ஒரு உலகம்
எழுவோம் புதுக்குரலில்
இசைப்போம் உலகப் பொது தேசிய கீதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூரானின் பீலி நிலம் பிளந்தாச்சு

காலைச் செங்கதிரைக் காணமுன்பு
காக்கை குருவி கண்விழிக்க முன்பு
இருளைப் பகல் வந்து இடமாற்று முன்பு

சூரிய முகத்தைச் சுட்டெரிக்கும்
சுத்தமான சொல்லொன்று.........
செந் தமிழின் செல்லக் கதிரொன்று
விடியலுக்கு விளக்கம் கொடுக்கும் கருவாய்
விண்மேட்டுக்கு விளக்காய் வெளித்தது......

கவிதைக் குண்டு கொண்டு
கடலைக் கொளுத்தின்-
பூமிக்குத் தீ பரப்பி
பூகோள உருண்டையை
உணர்வுச் சூரியனாய் உற்பவிக்க

உள்ளத்துப் பொங்கலிலே
கவி விதைமுளை விறு கொண்டது

குஞ்சுக் காலால் தெருமணலில்
கீறி நான் நடந்த போது
வீதியெல்லாம் விளையாடி வரும்
விண்முகத்துத் தேவதைகள் கூடி வந்து
நேச விதை நெஞ்சில்
விதைத்தன அன்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பள்ளியின் பக்கமெல்லாம்
பூகோள மானிடத்தின்
சூத்திரத்தைப் புரியும்படி
சொல்லித் தந்தன.

தா தா தத்தா என்று
சொல் நின்றாடும் சுரவிதியிலே
கல் தோன்றி மண் தோன்றாக் காலத்து
முன் தோன்றி மூத்த தமிழ்
நான் படித்து வந்தேன்.

களிமண் மண்டையோட்டுக்குள்
கடையப்படாத
கறைபடாத
நேசத்தின் தமிழ் நான் படித்து வந்தேன்.

பூவரசம் பூவினிலே
புதுக்கவி பாட
வண்ணத்துப்பூச்சி வருகின்றது.

ஆடவள் காத்திருந்தாள்
கட்டியவன் கட்டளையில்
கால் கட்டப்பட்டுக் கனகாலமாச்சு
காத்திருந்தாள் கற்ற கலை
அவள் காட்ட

அடிவளவால் ஆடொன்று
அங்கோடி வர
அது வந்து அடுக்களைக்குள் புக
அடுப்படிக்குள் ஆடடியென்று
அவன் சொல்ல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலெடுத்தாள் கட்டளை
தான் கேட்டாள்
அடுப்படிக்குள் அவளாடி
தா தா தி தி யென்று

உப்பொடு தூளும்
உள்ள மாவொடு அரிசியும்
உழக்கியே அவள் ஆட

ஆடோடி மரவள்ளிக்குள் மறைய
எடி எடி மரவள்ளித்தடியுள் ஆடடியென்றவன்
அலற

துள்ளினாள் தோட்டம் தூரவெல்லாம்
வாய்க்கால் வழியெல்லாம்

கவி நெஞ்சைக் காட்டிக் கனகாலமாக்கு
கழகம் கட்டளை தந்தது
கவி பாடிங்கென்று

பூவரசம் பூவினிலே
புதுக்கவிதை பாட
வண்ணத்துப்பூச்சி வருகின்றது.

காக்கைக்கும் தன் குஞ்சு
பொன்குஞ்சன்றோ
கன்னல் இன்சுவையை இணைத்தெடுத்து
இனிய தமிழ் நற்சொல்
அதில் குழைத்தெடுத்து

தமிழ் மாதின் தன் மார்பில்
இது ஒரு புதுப்பாமாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொட்டைப் போட்டு
பட்டைப் போர்த்து
நகை நட்டைப் பூட்டி
நாண நடையைக் கட்டி
வேலிக்குள் முகம் தாழ்த்தி
தாலிக்குள் தனித்திருக்கும் தமிழ்ப்பெண்ணே!

பொங்கற் சிரிப்போ
வங்கத்து முத்தோ
என்றுனை நான்
எதுகை மோனைச் சட்டங்களோடு புளுகி
என் காலத்தைப் புண்படுத்த

வியாபாரத்தனத்திலே விளையாட்டுக்கு
கவிநயத்தின் கட்டத்துக்குள்
உனைக்கட்டிப் போட்டு
வரும் காலத்தின் வக்கனையாய்
ஊமை வனிதையராய் வடிக்க
காலம் காத்திருக்காது!

கவிதைப் பரப்புக்குக் கன்னியின் கண்கள்
கருப்பொருளாய் போதை விழியாய்
பொழுதை வீணிலே எழுதி
உல்லாச மன்னர்களுக்கு
உறக்கம் வர
தசை வலிக்கு ஒத்தடம் கொடுக்க..
மன்னர் காலம் மலையேறிப் போச்சு!

கொக்கான் வெட்டிக் கும்மியடிச்சு
கெந்திப் பிடிச்சு ஒளிச்சுப் பிடிச்சு
எவடம் எவடம் புளியடி புளியடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணைக் கட்டிப் பெண்ணை நடத்தி
அம்மியை அவளை மிதிக்கச் சொல்லி
அடுத்து அடுக்களையில் அவளை மிதித்து

பெண்ணுக்கு ஒரு பொல்லா இலக்கணத்தைப்
போட்டுவிடும்
சாராயமன்னர்களுக்கு இனியும் மாறமனமில்லை
விண்ணை வெட்டி வீழ்த்தும்
விழியெடு பெண்ணே
நீ நடந்தால் இனி நெருஞ்சிமுளை மழுங்கும்
நாடென்ன உனக்கு நாளந்தம் நாலு விலை
போடவோ?
தங்கத்தராசுக்கு நீ தட்டுக்களோ?

பொட்டைப் போடடி நாணி நடவடி
கள் மயக்கம் குருடர்களுக்கு
உச்சிப் பித்தம் உச்சிவெயிலிலே

புண்பட்ட பண்பாடே
தீயாய்த் தீய்ந்து...
பெண் பட்ட பாட்டை
அவள் நெஞ்சுக்குள் நீ திணித்த
நெருப்பு மலையை நீக்கி விடு!

பொறாமைப் பெருங்காடே
பொல்லாப் பேய்க் குணத்தின்
புகலிடமே புருஷா
வெறி வாயின் சுடுகாட்டின்
நெஞ்சப் பகைப் புகையின்
கரி நெருப்பே கணவா
வாழ விடு வழி விடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்தாத்தின் பக்கம்
பூகோளக் கண்கள் போரை வாசிக்க
விழிக்கின்ற வேளையிலே
சுத்தமான மேக வீதியிலே

குண்டைப் பொரித்து
குடிமனைகளில் தீயைக் கழிக்க
தீர்மானங்கள் தீர்வாகின்ற வேளையிலே

நாள் புகைக்க தசைநார்கள் கருக
குண்டுகளைக் கொழுவி
எண்ணெய் பூமியிலே
ரத்தஊற்றே மலிவாகி
மானிடத்தின் கண்ணீர்ப் பொங்கலைச் சுவைக்க
ஆண்டு 88 ற்குப் பின் ஆண்டு 91
நாவை நீட்டியவேளையிலே

பக்தாத்தின் பக்கமெல்லாம்
பீரங்கிக் கண்கள் தீ கொளுத்தி ஆர்ப்பரிக்க
ஐ.நா. ஆவணங்கள் அவசரப்பட்ட வேளையிலே
என் எளிய வீட்டின் எண்ணெய்க் குடம்
தீயாய்ப் பொங்கத் தீர்மானிக்கப்பட்ட வேளையிலே

வாயு முகமூடி...
தெல்அவிவின் முகம் மாறிப் போச்சு
றியாத்தின் முகமும் அப்படியாய்ப் போச்சு

இப்படியே இது நீடித்தால்
செயற்கை முகமே சொந்தமுகமாய்
தெருக்களிலே போர் முகம்
போக்குவரத்துச் செய்யும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பான அரபு நண்பனே
பழைய பாபிலோனும்
நேற்றைய நேபுகாத் நேச்சாரும்
காலத்தின் வேள்வியிலே நெய்யாய்த் தீர்ந்து
போயாயிற்று!

சமீரும் யசிரும் ஆதாமின் வம்சம்

ஐந்து கண்டங்களும்
பூகோளசாஸ்திரத்தைப் புரட்டிப் புரட்டி
படித்தாயிற்று
அரசியல் சாசனங்களை அழித்து அழித்து
எழுதியாயிற்று!

சித்தாந்தங்களுக்குள்
சிந்தனைகள் சிக்குப்படுகின்றன
இன்னமும் ஒரு நீதி இயற்றப்படவில்லை
சிந்தும் இரத்தம் கூடச்
சித்தாந்த வெறியில் புலம்புகிறது!

ஒரு நீதி
ஒரு உலகம்
ஒரு உண்மை

கலர் மாறி கலர் மாறி
கறை பட்டுப் போன
கண்டங்களின் துண்டுப்பரப்புக்களின்
சொந்த முடிகளே
வாயு முகமுடியல்ல
உங்கள் பொதுமுகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு நீதிப் பொது முகத்தை
ஒன்றாய்ப் போடுங்களே

எஜமானர்களே
போர் இயந்திரத்தின் பின்னால் நிற்பவர்களே

ஆண்டுகளை அசுத்தமாய் ஆளுகின்ற
அந்தகங்களே அந்தகாரங்களே
எங்கே நேசத்தின் தீபம்?

சமையாப் பாத்திரங்கள்
சபையேறாச் சமாதானங்கள்

வியர்வைகளால் புழுதியில் பயறு படைக்கும்
கையின் காய்ப்புக்களால் கழனி வயல்களைக்
கடையும்

மானிட தேகமே
வறண்ட பக்கத்தில்
வாழும் பசி வயிறுகளே
கேளுங்கள் உங்கள் பங்கை
பூமிக்கு வாய் திறந்து உன்னைத்தான் கேட்கிறது!

பஞ்சத்தில் பதுங்கு குழியில் படுத்திருக்கும்
பிஞ்சு வயிறுதான் கெஞ்சுகிறது!

வறண்ட பக்கத்தின் பசி வயிறுதான்
விண்ணப்பிக்கின்றன
நேசத்தின் தீபம் எத்தனை ஜென்? எத்தனை
டொலரோ?
இருண்ட பகுதி இப்படித்தான் கூப்பிடுகிறது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படைப்பள்ளியின் இல்லவிளையாட்டுப் போட்டியோ
ஆயத்த ஆய்வுகளமோ?
அவசரப்பட்டுவிட்ட ஆயுதமடியில்
அரசியல் கர்ப்பிணிகளே!

ஐ.நா. சாசனத்தின் 678 பிரிவு
18500 தொன் குண்டு
3 மணிக்குள் 400 இலக்குகள்
600 ஆகாயவிமானங்களும்
16 பின்னிரவில் புள்ளிக்கணக்காய்
போர்ப்புகையாய்

பொல்லா விடியலொன்று கனாணிரோடு
நேசத்தின் நெஞ்சப்பரப்பெல்லாம்
மரணஅறிவித்தலைப் போலரியது

காதைக் குடைவதற்குக்
கட்டெறும்பு விட்டாற் போல்
ஐந்து கண்டங்களும்
அழுவதற்கு ஆயத்தமாகி
ஆயுதங்களைத்
துடைக்கத் தொடங்கியிருக்கின்றன

சமாதானத்தின் சத்தம்
இனி வெடியோசைக்குள்
விழுங்கப்பட்டு விடுமோ?

கண்டங்களின் கண்கள் எல்லாம்
கறுத்துவிட்ட போர் இருளுக்குள்
நேச ஒளி காண விழித்திருக்கவோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புக்தாத்தின் பக்கத்துப் பாத்திகளே
நட்டுவிட்ட நெருப்புக்
களைகளைக் களைந்துவிட்டு
நேச நாற்றுக்களை வளர்த்தெடுப்பீர்!

ஐந்து கண்டமும்
இனியொரு நேசம் நெய்ய
நீர் உடம் வயலில்
தர்மப்பயிர் வளர்ப்பீர்!

இனிய காலம்
உங்கள் பாத்திகளின் பக்கத்தே
தேசங்களைக் கூட்டி வரச்செய்து
நேச முத்தங்களால் உமை வாழ்த்த

மாரி காணா மனிதர்க்கு
பேரீச்சம் பழம் கொடுத்துப்
போஷித்து வருவதற்கு

நாளை தானத்தின் தளமென்று
நாடு நாலு வாழ்த்தி நிற்க
இருண்ட இடமெல்லாம்
எண்ணெய்க் குடம் ஒளி கொடுக்க

இனி போரின் வேர்களைச் சுட்டெரிப்பீர்!

பக்தாத்தின் பக்கத்துப் பாலைவனமெல்லாம்
பஞ்சத்து மூலைகளுக்கு
நேசத்துச் சோலை போல் ஆகாதோ?

ஓ! சின்னப் பூமியே
பக்தாத்தின் பக்கத்தே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனிவரும் நேச நீர் கண்டு
சின்னச் சூரியனாய் சிரிக்காயோ?

சின்னப் பூமிக்கு ஈர இதயம்
பாசத் தசை நாரால் பின்னப்பட

இருண்ட இடமெல்லாம்
ஒளிநீர் பாய்ச்சு
போரின் வேர்களைச் சுட்டெரிப்பீர்!

கொய்யாவின் கொப்பினிலே பூ வெடிச்சாச்சு
பப்பாசியோடு பலாவும் பலகாரம் பரிமாறியாச்சு
கிழக்குக்கும் கிழங்கு வடக்குக்கும்
தெற்கும் தேயிலை மத்திக்கும்
கலியாணம் கட்டாயம் நடக்கும்!

இனியென்ன இரவல் வாழ்வென்று
இந்தக் கால்கள் இதயம்
நோக்கி நடக்கும்.

கட்டுவன் களிமண்ணிலே
கல்லாற்றின் கட்டித் தயிர் மணக்க
கிளிநொச்சி வயலெல்லாம் அரிசிக்குத் தலை
கொடுக்க
பொய்யாய் நம் பொங்கலிலே
பொல்லாப் பகைப் பயறு இனி அவியாது!

அண்டப்புளுகை அரசியல் அலகாக்கி
நம் ரத்த நாளத்திலே
நாளைக்கு வேற்றுமைப் புழு வளர்க்க
உடதிலை மினக்கெட எனக்கு நேரமில்லை என்றாச்சு!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காஹுான்றி விட்ட கதியாஸ்கள்
கால் பூட்டிப் போகக் காலம் கனிந்தாச்சு!

கொண்டல் ஊதியாச்சு
கொழுத்த நண்டு கரை புரண்டாச்சு

கொழுக்கட்டை மோதகம் பிடிச்சாச்சு
தோசைக்குக் கல்லு சூடாச்சு

வடலிக்குப் பாளை வந்தாச்சு
பூரானின் பீலி நிலம் பிளந்தாச்சு
அண்ணாவிமார் அண்டப்புளுகை
அரங்கேற்ற ஆளில்லை!
கோத்திரப் பாய்களுக்கு
சாத்திர சூத்திர சகுனத் தவளைகளுக்கு
விடை கொடுத்தாச்சு!

விளக்கு கிழக்கிலே
விடியல் சூரியனாய் வந்தாச்சு!

மாடுழக்கி மந்தை மேய்ந்த மேடெல்லாம்
தர்மம் தழைச்சாச்சு!

சுயநலச் சூடு வாங்கி
குலக் கூட்டுக்குள்ளே
கிடந்த குருவியெல்லாம்
செட்டை விரிச்சாச்சு
குறிச்சி கலைச்சாச்சு
நேச வானுக்கு வந்தாச்சு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதுங்கு குழிக்குப் பாயெடுக்கும்
ஈரமில்லா இரவுகளை
நல்ல சூரியன் வந்து
சுட்டு விடும்!

துரவினிலே நீர் சுரக்கும்
தோட்டத்துப் பாகலுக்குத் தேடி வரும்
மாரி வரும்
மந்தை புல் நாடி வரும்!

மாசி மாதம் மங்களமாய் மலரும்
பருப்பு பயறு பச்சையாய்ப் படரும்

சின்னக்கால்கள் அஞ்சாமல் பள்ளி செல்லும்
செல்லச் செம்பரத்தை செல்லும் பள்ளித்
தெருவெல்லாம்
செவ்விளநீர் சொல் வந்து
செவியோடு சேதி சொல்லும்!

ஊர் மணக்க வேர் விட்ட ஊசி மல்லி
ஊவா மாகாணத்து ஒக்கிட்டோடு
உல்லாச உலா வரும்!

ஒரு நாள் வரும்
சிங்களம் மங்களமாய்
ஈழத்து மண்ணினிக்க
இனிய கவி இயற்றி விடும்!

முற்றவெளி முகம் முட்ட
முழுவதும் மூடி நிற்கும் தமிழ் ஊர்கள்
வந்து பொங்கப் பொங்கப் புது சொல் அரிசியிலே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமநிதிப் பால் விட்டு சாதிக்கு நெருப்பிட்டு
சர்க்கரையாய்ச் சமாதான இனிப்பூட்டி
அருங்குணங்கள் அத்தனையும் அங்கு ஆடவர
மானிட வயல் மேல் நேசப்புறா பறந்து வர

பூவரசம் பூவினிலே புதுக்கவிதை பாடுகின்ற
நம் நாட்டு வண்ணத்துப் பூச்சி
உணர்வு பொங்க தேவனுக்குப் பட்டுச் சிறகடித்து
நிறம் திட்டி உருமாறிப் போகின்றது

வாழ்க தமிழ்! வாழ்க! என்று வாழ்த்தி அது
பூவரசம் பூவினிலே புதுக்கவிதை பாடுகின்ற
வண்ணத்துப் பூச்சி
உணர்வு பொங்கி உருமாறிப் போகிறது!

## பொருள் எதடா?

பொன் பேனாவாயினும்
வெறும் பேனாவாயினும்
பெரும் பெருமை பொருந்தா

பொழுதுக்குள் புலரும்
பெரும் உண்மை

அறிவின் சுடர் அதைத் தேடும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெய்மை விளக்கும்
விளக்கும் விடியலில் அவியும்

உண்மை உள்ளே ஒளிரும்
உன்னைக் காட்டக் கண்ணாடி
உனக்கெதற்கு?

ஒளிரும் பேரொளிப் பெட்டகம்
அறம் காவும் நெஞ்சம்

புலம்பித் திரிவது தான் புண்ணியமோ?
தொலைவில் அறையில் தெரிவதும்
ஒரு சுடர் தான்.

எளிமைக்குள் எரியும்
எண்ணங்கள் திரியும்

அன்பின் பாத்திரம்
இறைவன் சத்திரம்

நீயே மதங்கள் தேடும்
மூல மந்திரம்,

வேதம் வேறில்லை
களிப்பாய் சிரிப்பாய்!!!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலம் பெயர்ந்தவைகள்

சுடமணல் பருமிடமெங்கனும்
அட வெந்தணல் இதெங்கணம்
வெறுகால் தரை நோக
பொறுக்கால் அவர் கால்
வெறுப்பால் மிதிப்பால்

சுத்தமான மனிதனை வெளியே விட்டு
சித்தமற்ற சிலைகளை உள்ளே வைத்து
கதவுகளைப் பூட்டியபோது தான்
தேசங்களை விட்டுத் தெய்வங்கள் புலம்பெயர்ந்தன!

சுடமணல் பருமிடமெங்கனும்
அட வெந்தணல் இதெங்கணம்
வெறுகால் தரை நோக
பொறுக்கால் அவர் கால்
வெறுப்பால் மிதிப்பால்
ஓலைப் பனை நிழல் ஓரம்

காலிமுகத் திடலிலே
காலிகள் சத்தியாக்கிரகிகளுக்கு
வேலி போட்டபோது தான்
58 ல் அழுக்கானது அரசியல்
தடியடி தார்மீகம் ஆனது
புனிதங்கள் புலம் பெயர்ந்தன!

சுடமணல் பருமிடமெங்கனும்
நெருஞ்சி முள்ளோ தெருவோரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடும் கண்ணெனக் குத்த
விடு நீண்ட தொலைவோ?
அ|...........அ|..........ஆ.....ஆ...
ஓ..........ஓ.............ஓ...........ஓ
ஊ.........ஊ.............ஊ...........ஊ

கண்டி மலை முகட்டிலே கடையப்படும்
உண்டி போடும் உடைவுச் சூரியர்கள்
வாக்குரிமை இழந்து
வண்டி காய்ந்து வயிறு எரிந்து நின்றபோது தான்
கொழும்பைக் கொளுத்த
புத்தரின் சித்தத்தில் தீ முளைத்தது
தர்மம் தர்பாரைவிட்டுப் புலம் பெயர்ந்தது!

இதென்ன இன்று
ஈழமண்ணின்
நிழல் தரும் நெடு வேம்புகளே
தரை கிழித்து நீள் வேர் பரப்பி
நிரை நின்றீரே நீரெங்கு புலம் பெயர்ந்தீர்?

மானிடம் புலம் பெயர
போர் புலம் வர
கண்ணீர் ரத்தம்
அனாதைகள் விதவைகள்
ஆயுதம் அடக்குமுறைகள்
நிலம் புலம்ப
சடலங்கள் புலம்பெயரும்!

எண்ணங்களின் ஆணிவேர்
பண்பட்ட தமிழ் அகரத்துள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆழப்பதிந்த காரணத்தால்
உன் கிளைகள் வேற்று மொழியைச் சுவாசித்தாலும்
உன் ஜீவன் ஜீரணிப்பது தமிழைத்தானே!

விளக்கைக் கடிக்கும் இருட்கள்
ஒரு விடியலைத் தருத்திடுமோ?

செம் மண்ணின் வாழையென
தமிழில் தழைத்த மானிடம்

தன் புலம் திரும்பாதோ?
எல்லோரும் புசித்திடத் தன் நிலம் திருத்தாதோ?
விளையாடும் வீதியெல்லாம்
நம் விழாக்கள் புலம் பெயர வந்த
விரியன்கள் தம் வீடு செல்லாரோ?

சுடமணல் படுமிடமெங்கனும்
அட வெந்தணல் இதெங்கணம்?
நீறு பூத்திருக்கே நித்தியமாய்
நம்மை நிழல் தேடித்துரத்துமோ?
மண் மணக்குதடி மனதுக்குகந்தவளே
மார்கழி வருகுதடி
நிச்சயம் குடை மரங்கள் வைப்போம்

புண் பட்டோம் புலம் விட்டோம்
பண்பட்டோம் நிலம் மறவோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூ புத்தாண்டு வரும்...

கோலப்பாட்டெழுதிக்
கொட்டிடுவாள் கொள்ளையன்பை!

தாலாட்டுத் தேன்தமிழால்
தன்நெஞ்சு தான்குழைத்து
தந்திடுவாள் தன்னன்பை!

நொந்து எனை நூற்றாள்
நோன்பிருப்பாள் நோய் கண்டால்!

அந்த அன்னையவள் அருகிருப்பாள்
ஆக்கிடும் கவி அவளாசியாலே!

விடிவெள்ளி ஓடிவர
விண்ணுடுத்த இரவுப்போர்வையொன்று
முடிவென்று முந்திய ஆண்டுக்கு
முத்தாய்ப்பாய் ஒதுங்கிவிட
மேகத்திரை கிழிய

பொற்கதிர் கண்டு பொங்கலிட்டுப் பூரிக்க
பெற்றவரும் மற்றவரும் பேசிமகிழ்ந்திருக்க

முற்றிய கனியொடு முத்தமிழ்க் கலையொடு
முற்றத்தில் கோலம் சிரித்துக் கிடக்க

செந்தமிழின் சிறப்பெல்லாம் சேர்ந்திருக்க
சின்னஞ்சிறுசுகள் சினவெடி கொளுத்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்த விருந்தை வரவேற்க
வளை கொஞ்சும் கரமெல்லாம் முந்த

சந்தனப்பொட்டு அதைச் சரியாக இட்டு
சரிகைப்பட்டு அதை வழுவாத கட்டு

நந்தவனத்தில் மல்லிகைமொட்டு
நங்கையவள் பின்னலை அது தொட்டு

பூபாளத்தில் புன்னகை மெட்டு
பூவையவள் புதுக்குரலில் சிட்டு!

காளையவன் கண் பட்டு
குமரியவள் குங்குமத்தட்டு

தெருவெல்லாம் கூத்தாடும்
திண்ணையெல்லாம் பண்பாடும்!

அம்மியிலே குழவிக்கல் மோதும்
உலக்கைகள் ஒத்தூதும்

அடுப்பினிலே கத்தரி பொரிந்து கத்தும்
நெத்தலிக்குழம்பு கூப்பிடும்

தலைவாழை இலை விரியும்
தயிர்வாடை அதில் வீசும்

சமையலெல்லாம் சங்கீதம்
சபையெல்லாம் சந்தோசம்

பொன்னள்ளி வீசும் பௌர்ணமி நிலவினிலே
பொக்கைவாய்ப் பொன்னம்மா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெடி பெட்டை சூழ்ந்திருக்க
பக்குவமாய்ப் பழங்கதைகள் பகர்ந்திடுவாள்.

பேத்தி பனங்கிழங்கின் நாரெடுப்பாள்
பூட்டியவள் பாக்குரலில் இடித்தெடுப்பாள்
பொக்கை வாயதைப் பொச்சடிக்கும்
பெடி பெட்டை மனம் புல்லரிக்கும்!

புத்தாண்டின் ஒரு பொழுது
புன்னகையாய்ப் பொலியும்!

மாந்தோப்பில் வெளவால் தாளமிடும்
தென்னங்கீற்றில் தென்றல் உறவாடி
மெட்டமைக்கும்

வடலிகளில் வண்டு வந்து
சிந்து பாடும்
பசனையுச்சி தலையாட்டி மெய்மறந்து ரசிக்கும்!

காத்தானின் கூத்தும்
நல்ல களியாட்டமும்
ஓர் இரவைப் புதுமலராய்ச் சந்திக்கும்!

விசிலடிக்கும்
விடலையொன்று
ஒற்றைத் திருக்கை வண்டியொன்றை
கல்லொழுங்கையெல்லாம்
சதங்கை குலுங்க ஓட்டும்.

கும்பலாய்க் குடும்பமொன்று
குந்தியிருக்கும் நெருங்கியதில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோடியுடுத்துக் கோயில்கள் சிரிக்கும்
புத்தாண்டின் ஒரு பொழுது
புன்னகையாய்ப் பொலியும்!

பத்தாண்டுக்கு முன்னே-
புத்தாண்டு இப்படித்தான் இனிக்கும்

இரவைக் கிழித்து
உயிரைக் குடிக்க வரும் ஷெல்கள்

நெஞ்சினிலே நினைவின் நெருஞ்சி
முட்களாய்த் தைக்கும்!

தொட்டழிக்க முடியாத
நெருப்பின் வடுக்கள் அவை

பொட்டழிந்த ஈழப்பெண்ணொருத்தி
இதயம் காய்ந்து நிற்கிறாள்

பொங்கலுக்குப் பூவெடுக்கும் பூவையவள்
பொட்டிழந்து பூவிழந்து போனாள்!

கரும்புக்குக் கடன் கொடுக்கும்
இனியவள் இன்று
வேம்புக்கு விலையாகிப் போனாள்!

காற்றைக் கருங்கூந்தல்
ஒத்தடம் கொடுக்கும் அவள்
கண்ணிரண்டும் வேல்களுக்குக்
கூர் கொடுக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த ஈழப்பெண்ணொருத்தி
இதயம் காய்ந்து நிற்கிறாள்!

இவள் குங்குமத்தைக்
குண்டுகள் தின்றனவோ?

யாழ் வீடு ஒவ்வொன்றும் ஓலமிட்டால்
இவள் ஓலம் யார் கேட்பார்?

முற்றமெல்லாம் மயானமானால்
தாட்டுவிட்ட தமிழ் நெஞ்சு
பொங்கலுக்கு நெருப்பிட்டால் வேகாதோ?

வட்டினிலே ஷெல் விழுந்து
குருத்துக் கருகியதனால்
தோரணம் தேடி நீ திரிந்தால்
தென்னை தான் திட்டாதோ?

அன்புடையார் என்புமுரியர் பிறர்க்கு
குறள் கொடுத்த தமிழா
குணம் கெடல் சரியா?

கல் பேசும் கல்லுளி கொஞ்சி
கல் மனம் கரையும்
தமிழா குறள் கேள்

புற் தரையெல்லாம் குண்டு கிழித்துப்
புண்ணாகிப் போனதனால்
பொங்கலுக்குப் பால் கேட்டால்
பசு பேசாதோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்பைக் காவல் நாய் மேய்ந்த
பெண் பெய்யும் கண்ணீர்
வெந்நீர் ஆகாதோ?

பன்னீர் பட்டால்
உன் செந்நீர் துடிக்காதோ?

குண்டுகள் தான் பொங்கலுக்குப் பயறுகளோ?

வீட்டு நாய்களே விருந்துண்ண மறுக்கின்றபோது
நாட்டு மனிதர்கள் நாம்
கூரைக்குத் தீ வைத்துக் குறள் படிக்கலாமோ?

நமக்கொரு நாடும்
நாளைக்கொரு விடியலும்
புத்தாண்டைக் கொண்டு வரும்
புத்தாடை புனைய ஒரு திருநாள்
தேடி வரும்!

யாதும் ஊரே யாவரும் கேளிர்
கனிவான குரலெடுப்போம்
கள்ளப் பகை மறப்போம்!

பணிவான குணம் கொள்வோம்
பண்பான குலமாவோம்!

பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும்
நற்றவ வானினும் நனி சிறந்தனவே!

ஈழத்து மண்ணுக்கு இனிய நற் பாட்டெடுப்போம்
கடல் வந்து முத்தமிடும் கன்னித் தமிழ் மண்ணை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போர்ப் புகை சூழ்ந்த
பொல்லாத இருள் போக வரம் கேட்போம்!

மண்ணின் மழலைகள் மாலைகள் மாட்டி
வண்ணத் தேரொன்றில் வருகின்ற சுந்தரியை

சின்னஞ் சிறிசுகள் சிரிப்பில் சுதி சேர்த்து
துதி பாடி வரவேற்க வழி பார்ப்போம்

அப்போது
பசு வந்து பானைக்குள் பால் பொழியும்!
முற்றத்து மண்ணும் முத்தமிழால் வாழ்த்தும்!
தென்னை தேடிவந்து தோரணமாய் ஆடும்!

பார்த்திருக்கும் தென்னை பச்சரிசி கொண்டு வரும்!
வேப்பமரமங்கே வெண் தூவி விடும்!

மா பலா வாழை கனிச்சுவையை
காற்றங்கே காவி வரும்!

இளைய நம்நாடு புத்தாண்டில்
இனிக்கும் ஒரு காலம் வரும்
இரை எடுத்த பகை
இனி இல்லாது போகும்

எட்டுக் கோடி தமிழ் நெஞ்சும்
விண்ணெட்ட விண்ணப்பம் செய்தால்
தேவனின் திருவாசல் திறக்காதோ?

கேளுங்கள் கொடுக்கப்படும்
தாயின் வயிறொன்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோய் கண்டு துடிக்கும் போது
சுமை தாங்கித் தவிக்கும் போது

ஆக்கிய மண்ணைக்
காடாக்கிய கதை கேட்கும் போது
கண்ணின் நீர் அதனை யாருக்கையா விற்றீர்?

நம் அன்னையர் தாலாட்டில்
நிலவு தடுமாறி முகிலோடு மோதும்
அவள் அன்புக் குழையலை
தென்றல் தீண்டிப் பசியாறும்

சொந்த மண்ணில் சோக கீதம்
இந்த மண்ணில் நமக்கென்ன கொண்டாட்டம்?

வாடிச் சோருகின்ற
வங்கத் தொடுகடலின்
ஓங்காரத் தமிழின்
ஒப்பற்ற பிள்ளைகளை

கவியால் நலமாக
கண்ணீர்க் கவியால்
ஆண்டவனுக்குத் தூது விட

புத்தாண்டுக் கதிரொன்று
முற்றத்தில் சமாதானத்தின் கோலங்களைப்
பொறித்திடக் கூடி வந்தோம்!

புத்தாண்டு புன்னகையாய்ப் பொலியும்
பொங்கு தமிழ் ஒரு ஓங்கு புகழ் காணும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாட்சிப் பூக்கள்

மலர்களைப் பார்த்தேன்
அவை வாடிப் போகின்ற
நிலையை எண்ணிக் கண்ணீர் வடித்தேன்
ஆனாலும்
அவை சில நேரம் மிகுந்த அழகாய்க்
கெம்பீரித்து நின்றன.

என் இதயத்தோடு அவை பேசின
அந்த மலர்கள்
தேவ அழகை முழுவதுமாகத் தாங்கி நின்றனவா?
இல்லையே.

ஆனாலும் தேவைக்கு மீறி அம்மலர்கள்
என் இதயத்தில் பேசின.

ஓ...கர்வம் மிக்க மலர்களே
காலைக்கும் மாலைக்கும் இடையே
உங்கள் கால எல்லை
நிர்ணயிக்கப்பட்டிருக்கும்............
உங்கள் கர்வத்தின் காரணத்தை எண்ணிக்
கண்ணீர் வடித்தேன்!

ஓ ஜீவனுள்ள மலர்களே...
தோட்டத்துப் பூக்களையல்ல
தெருவோரத்துப் பூக்களையல்ல
யன்னல் ஓரத்துப் பூக்களையல்ல
தேவனின் வீட்டுப்பூக்களையே கூறுகிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்கள் காட்சிப் பூக்களல்ல
சாட்சிப் பூக்கள் என்றபடியால்
நித்தியத்துக்குள் மகிழ்கிறேன்!

நீங்கள் புழுதி மேட்டிலல்ல
தேவன் வீட்டில் காணிக்கையாக்கப்பட
வேண்டியவர்கள் என்பதால்
ஓ...ஜீவனுள்ள பூக்களே
உங்கள் ஆத்மாவிற்கு ஆவியுள்ள செட்டை
பூட்டுங்கள் என்று சொல்கிறேன்!

காலங்களைச் சுத்தப்படுத்துகின்ற
கடவுளின் தோட்டத்தில் மலர்கின்ற
உங்கள் நேசத்தின் வாசம்
நித்தியமாக நீடித்திருக்க வேண்டும் என்பதால்
உங்களைப் பறக்க வேண்டும் என்று
யாசிக்கின்றேன்!

தோட்டத்துப் பூக்களைப் பார்த்தேன்
ஒருவேளை அவை தேவ நேசத்தின்
மென்மையைச் சொல்லியிருந்தால்
பொறுத்திருப்பேன்

தேவன் அழகைச் சொல்ல இங்கு யார்
இருக்கிறார்கள்?
ஓ பூவே மீண்டும் நீ தோற்றுப் போனாய் என்பதால்
கண்ணீர் வடிக்கின்றேன்!

நித்தியத்தை நினைத்துப் பறக்கின்ற ஒரு
ஆவிக்குரியவனுக்கு
ஓ தரைப் பூக்களே நீங்கள் தெரியவில்லை
நட்சத்திரங்கள்..சூரிய சந்திரர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கே எல்லாம் கருகிப் போகின்ற மலர்களை
நான் காணவில்லை!

ஓ... நித்தியத்தில் மலர்கின்ற ஜீவ மலர்களே
நீங்கள் காட்சிப் பொருட்கள் அல்ல
சாட்சிப் பூக்களாதலால் உங்களைப்
பறக்கும்படி யாசிக்கின்றேன்!

வீட்டுக்கோடிக்குள் மலர்ந்து
பூஜை அறையில் வாடிப் போகின்ற
வேதனைப் பூக்களே..
உங்கள் கண்ணீர் தேவன் வீட்டைக்
காயப்படுத்துமே
தவிரச் சாயப்படுத்தாது!

நீங்கள் தேவன் வீட்டை வேய வேண்டும் என்பதால்
பறக்கவேண்டும் எனக் கேட்கிறேன்.

## சகிப்புச் சத்திரம்

கற்க முடியா வெறும் மூளையே..

புது உணர்வுக்குள் போய்
அத் தீயின் வெம்மைக்குள் திரண்டுவரும்
முடிவில்லா அன்பின் ஆழத்தின் ஊற்றில்
நிரம்பி நின்றாடும்...
அற்புத சுகத்தில் ஆகுதியாகயோ?
ஓ ஓ ஓ ஓ
தேவ நேரங்களே வாருங்கள்..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் வெறும் பொழுதைப் பொங்கலிடும்
அந்த நினைவுச் சூரியனை நீட்டிவிடுங்கள்!

எங்கே அந்தத் தேவ தாயின் கர்ப்பம்?
நான் அதற்குள் மறுபடி ஞான சூரியனாய்ப்
பிறக்கவேண்டும்!

எங்கே அந்த முலைகள்?
தேடி வந்து
தேறுதலைத் தருகின்ற
அன்புத் தாயின் வல்லமை ரத்தம்..

அவள் மடியில் தேடி நான் போக
குழந்தையாய்க் குறுக..
யார் அந்த மந்திரவாதி?

ஓ..நேரத்தை மினுக்கும் தேவ குணம் யாரிடம்?

என் இரவுக்குள் என்னை ஓட வைத்து
பகலுக்குள் ஓர் வளர் பருவத்தை வாரி வழங்கும்
கனவுகளின்
தீர்க்கதரிசனத்தின்
அந்த நினைவு ஊற்றின்
வித்துப்பை எங்கே?

யார் அதன் தகப்பன்?
தெளிவுக்குள் வேகமாய்த் தெரிகின்ற
என் ஞானத்தின் தகப்பனே நீ எங்கே?
என்னைப் புதிதாக நேசத்தில்
நீ பொரிக்க மாட்டாயா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைவுப் போதையின்
நெருங்கிய வெளிச்சத்தின் உறவுக்காரர்களே...
நீங்கள் என்னைச் சொந்தம் கொள்ள
மாட்டீர்களா?

முளைக்குள் ஒரு உலகத்தைக்
கட்டக் காத்திருக்கும் சிருஸ்டிக்கரங்களே ..
இந்தப் பாலைவனப் பரப்புக்குள்ளே
புது மாளிகையின் வலயம் வரையமாட்டீர்களா?

எங்கே என்னை உட்கார வைத்து
உள்ளே என் உலகத்தை உசுப்பி விடும்
அந்த உற்சாக நேரங்காட்டி?

எங்கே என் அறை?
என் மௌனத்துக்குள்
ஞான விண்வெளியைத் திறக்கின்ற
அந்த முடிவில்லா விண்வெளியின் கதவு எங்கே?

என் தேவலோகப் படிக்கட்டாய்
எனக்குள்ளே என்னைத் திறந்து வைத்து
தனக்குள்ளே தன் ரகசியங்களைச்
சொல்லிக் கொடுக்கும் பள்ளிவாசல் எங்கே?

ஒரு ஓட்டத்தின் மிடுக்கை
என் மெல்லிய கால்களுக்கும்
முடிய கண்களுக்கும் கொண்டு வரும்
பூஞ்சோலை நடைபாதை
அந்த மெல்லிய மலர்களுக்குள்
என் கொடிய நாய்களைத் துரத்துகின்ற
தீப்பந்தங்களைத் திரட்டி வைத்திருக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் மௌனத்தின் சோலையே!
நீ எங்கே?

மானுட உச்சகுணத்தின் அமைதி வெளியே!
நாகரிகத்தை நிமிடத்துக்குள்
கைப்பிடிக்குள் கற்றுத் தரும்
என் மௌனத்தின் சோலையே நீ எந்தப் பக்கம்?

புரிகின்றது...புரிகின்றது
சகிப்புச் சத்திரத்தின்
ஒரு பாதையோரம்
எல்லாப் பெயர்ப் பலகைகளும்
தெளிவாய் எழுதப்பட்டிருக்கின்றன.

# சிரிப்பொலி

சிரிப்பொலி
சுத்தமான இதயத்தின் சுருதி,

அது மானிட சங்கீதத்தின்
முதல் இசைப்பு,

பன்மைகளை ஒருமையாக்கும்
(சிருஷ்டி) சமத்துவத்தின் விலகாத இலக்கணம்,

விதைகளைப் பக்குவப்படுத்தும்
உணர்வுகளின் உற்பத்தி மேடை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உற்சாக விளையாட்டு மைதானம் காணும்
ஒலிம்பிக் தீபம்,

இலகுவான இதயத்தில் எழுகின்ற
எழுதாத புதுப்பாடம்,

குரு அற்ற கலைக்கூடம்,

கூடுகின்ற குருவிகளின் கீச்சொலிகள்
சங்கமித்துச் சங்கீதம் செய்கின்ற
சந்திப்பின் கழிமுகம்,

வாழ்த்துப் பாவிற்கு வரிகளைத் தேடுகின்ற
கம்பனுக்குக் கடன்கொடுக்கத் திறக்கின்ற
சொற் களஞ்சியத்தின் தத்துவத் தாழ்ப்பாள்..

பள்ளிப்பிள்ளைகள் பார்த்திருக்கும் மணியோசை..

சுதந்திர உணர்வின் சங்கொலி,

கவிஞனின் (அடிமை கொள்ள முடியா)
கற்பனைக் கோட்டையின்
சிம்மாசன(நிஜ)ராணியின்
சிங்கார பவனியின்
எக்காளத்தொனியின்
உருமாற்றத்தின் உந்தலின் முதல் பிறப்பு..

மொத்தமாக,
சுதந்திரத்தின் சுத்தமான
உறவைக் கூப்பிடும்
அழைப்பிதழின் வர்ணக்குழம்பு...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "சிரித்தே நீ எரிக்கவேண்டும்

நீ அழ வேண்டாம்
கண்ணீர் நிறைந்த கண்களால்
உன்னால் உன் உலகத்தின்
இரத்தக் கறைகளைக் கழுவமுடியாது!

நாங்கள் உன்னிடம்
மானிடம் படிக்க
நீ
எப்போது
உன் நெற்றிக் கண்ணில் நெறி கொண்டு வருவாய்?

ஜீவனை
நெறிப்படுத்தும்
சின்னப் பிஞ்சே
நீ சிரிக்காயோ?

நீ சிரிக்கத் தானே
இங்கும் எங்கும்
வாழைகள் குலை தள்ளிச் சரிகின்றன
வாழைக் கன்றினை
நீ சிரித்துத் தானே வாழ்த்த வேண்டும்...

நொங்குக் குலையும்
வங்கக் கடல் அலையும்
எங்கள் யாழ் மண்ணில்
உன்னை எண்ணித் தானே உறவாடும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கம் வந்து வந்து..
பருத்தித்துறை மண் பரப்பில்
உனைப் பார்த்துப் போகுதே!

தண்ணீரிலே
கண்ணீராலே
நீ
பாலம் கட்ட முடியாது!

உன் உலகம் உன் சிரிப்பை...
சின்னப் பிஞ்சே கேட்கிறது

சுதந்திரச் சுடர்கள்
சூரியர்களாய் எழ
உன் சிரிப்பைத் தான் சின்னப் பிஞ்சே கேட்கிறது!



# சுதந்திரக் குயவர்கள்

கூரலகு வைத்தது யார்?
கொத்திக் கோதுடைக்கக் கற்றுக் கொடுத்தது யார்?

சில நாள் சின்னக் கழுகு
சிறகு முளையாமற் சிறையுண்டே
புல்லிற் சிறையுண்டே
காற்றைக் கண்டழுதது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏங்கிய சிறகு
எங்கனம் வந்தது?
சீறி எழுந்தது
சிறிய புயல் கிழித்தே அது

கூரிய சொண்டில்
கொத்தும் குணத்தில்
பறக்கும் சிறகில்
சுதந்திரம் வனைந்த குயவன் யார்?

காற்றைச் சிறையாக்கி
உயரம் கண்டது உலகையளந்தது
காற்றினில் சிறகு சிறையாகுமோ?

சுதந்திரம் கற்பனையோ?

கூட்டுக்குள் அடிமைக் கட்டுக்குள்
வீட்டுக்குள் பேசும் அந்நியமொழிகள்
கிளிகள் மொழியோ?

சுட்டிடும் சூழ் காற்றும்
நிறைவோ சிறகுக்கு?
கூட்டுக் கிளிக்குச் சிறகொரு பாரம்

சூத்திரக் கயிற்றில் தினமாடும்
சக்கை பொதிந்த சடலமது

விரியும் சிறகில் விரிவோம்
எரியும் தணலாய் எழுவோம்

சிறகுகள் சிறையாகுமோ காற்றில்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கழுகாய் எழுந்து
எதிர் தடை வென்று
சுத்த சுதந்திரம் செய்வோம்!

ஒன்றே நாம்
ஒரு பாத்திப் பயிர்கள்
சிறகுகள் கொண்டோம்
சீறும் புயலில்
ஒன்றாய் எழுவோம்!

அங்கங்கள் நாமே
அறத்தின் உடலில்

மறம் தான் நெஞ்சம்
மடி தான் உனைத் தாங்கும் மடி தான்
நான் உனைத் தாங்கும் மடி தான்!

சுதந்திரம் நம் சொந்தம்
வீரியலகின் கூரிய முனையினில்
சுதந்திரம் செய்வோம்!

நானும் நீயும் அன்பில் எரிவோம்
அணையா ஜோதி
நாளைய உலகில் எழுந்திடும்
துதிதான் நாமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெய்வம் தேவை

அருள் அருகும்
இருள் கவ்வும்
இந்த உலகில் இன்று

உன் நெஞ்சில்
வஞ்சம் களைந்து
தன்னன்பு தான் விளைந்து
தளிர்க்கும் பொதுப் பேரன்பு
ஒளிரும் வண்ணம்

நீ ஒருவன் மட்டும்
திருந்தினாற் போதும்
ஒரு தீபம் தேவை
ஓடி வர ஒரு தெய்வம் தேவை!

அவையிரண்டும் இன்றில்லை
அவை
நாளை நீயாகலாம்,
அன்பானவனே
இன்றே முயல்
இதயத் திரிகள் ஏராளம்,

ஆனால்
தூண்டுவதற்கு
ஒரே ஒரு ஒளிமுதல் தேவை,

அன்பானவனே
நாளை
நீ தான் அந்த
ஒளி முதல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வளர்... வளர்... வளர்...

வாழ்த்துக்கள் வணக்கங்கள்
வருடமொன்றில் ஒன்றையொன்று வரவேற்க
மங்களமாய் மணிமுகத்தின் மலர்மொட்டுக்கண்கள்

தமிழ்விடியலுக்குள் தர்மத்தைத்
தரிசிக்கத் தவமிருந்தனவோ?
உங்களைத்தான் உங்கள் கண்களைத்தான்
உற்சாக வெறியோடு
உலகத்தை உருசிபார்க்கும்
உங்கள் கண்களைத்தான்.
மணிமுகத்தின் மலர்மொட்டுக் கண்களென்றேன்.

வாழ்த்துக்கள் வணக்கங்கள்..

வரவேற்பு வசந்தத்தின் வளைவினிலே
விரிகின்ற நேசவாசத்தின் வழியாய்த்
தெரிகின்ற மலர்மொட்டுக் கண்களென்றேன்.

தாயின் நேசத் தாலாட்டு முதற் தமிழால்
வளர் வளர் என வார்க்கும் நீரோடு
வாழ்த்தை ஊட்டி வளர்த்த
உத்தமத் தாயின் உதடெடுத்து

வளர் வளர் என வார்க்கும் நீரோடு
வாழ்த்தை ஊட்டி வளர்த்த
உத்தமத்தாயின் நேசத்தின் வாசத்தில்
நெறியின் நெருக்கத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறம்காக்க அவனை அர்ச்சிக்க
அன்றலரும் தேவ தோட்டத்தின்
தமிழ்க்கவிமலரால் பூஜித்து

தமிழ் விடியலுக்குள் தர்மத்தைத்
தரிசிக்கத் தவமிருக்கும்
மணிமுகத்தின் மலர்மொட்டுக் கண்களே!! கண்களே

வளர் வளர் என வார்க்கும் நீரொரு
யாழ்மண்ணில் நீர் குடித்து வேர் ஓடி
நாரொரு கிழங்கை நல்கிடும்
நம்மினிய கற்பகத் தருக்கள்
கானலைக் கனியாக்கும்

போரின் வேர் ஓடி
நீண்டபனைகள் சோகம் கேட்போம்

நேர் நெடிய பனை கொகுக் கடித்து நொந்ததாம்
வடலிகள் அதை வக்கனையாய்ச் சொன்னால்
பனம் பழம் பல்லிளிக்கலாமோ?
அதைப் போர்த்திருக்கும் கொகுக்கள்
ஒழித்திருக்கும் வட்டுக்களைத் தீண்டுமோ?

நேர் நெடிய பனை கொகுக்கடித்து நொந்ததாம்
யாழ்ப்பாணத்துப் பனைகளுக்குக்
கொகுக்கடி கொஞ்சக் காலம்

பொறு பொறு
வட்டு வானத்துக்கு வரும் நாளை
அந்த ஒழித்திருக்கும் வட்டு
வானத்துக்கு வரும் நாளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு புது வட்டின்
மழலைக்குப் பெயர் தான் பீலி

உறங்கிய பீலிகள்
உறவாட எழுந்தால் பூகம்பமோ?
வடலியாய் வளர்ந்தால் வக்கனையோ?
விழித்தே பீலி
புதிய காற்றைத் தொட்டால்
புரட்சியோ?

தடுத்த நிலத்தைக்
கிழித்தே எழுந்தால் விபத்தோ?

ஏர் சுமந்து
வேர் முனைக்கு நீர் கொடுக்க
வேர்வையில் சூடாறிச்
சூரியனோடு போராடி
சுத்தமாய்ச் சூடு மிதித்து நெல் மணியாய்
சுற்றம் சூழலுக்குச் சுகம் கொடுக்கச் சோறிட்டு
நாற்றை நற்றமிழோடு நடுவான்

வளம் வரவே வருந்திடுவான்
வரப்புயர்த்தி நெல் வளர்த்திடுவான்
காவலுக்குக் காலை வரை கண்விழித்திடுவான்
கதை காணீர்..
காற்றோடு வந்து அவன் கண்ணீர்
அழுது சொல்லுதே.

சுமம் காய்ஞ்சு போய்ச்சாம்..

கருமுகில் கண்டு கனகாலமாச்சாம்..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வயலுக்குள் வாய்க்கால்கள்
விதைத்தவன் கண்ணீரைப் பாய்ச்சுதாம்..

மழை ஓடிப்போய்ச்சாம்..

யாழ் மண்ணே வன்னிக் காற்றை
வரி கொடுத்து வாங்குதாம்..

வயிறுகளுக்குப் பயறில்லையாம்..
பாவை பூடோல் பார்த்துப் பல நாளாச்சாம்..

நீர்வேலி வாழையிலே
குருத்தைக் கொண்டு வர
செம்மண்ணே கைக்கூலி கேட்குதாம்..

பாலைப் பாலகன் வெள்ளையென்றால்
இல்லையென்றே புரிகின்றான்..
ஏரோடவில்லைத் தேரோடவில்லை..
ஏடெடுக்கப் பள்ளியிலே
அடுப்பினிலே அது இல்லை..

விறகுக்கும் விளக்குக்கும்
கண் இல்லை...

இருளைப் புரட்சிசெய்து
இல்லையென்ற சொல்லை இல்லையென்று சொல்ல
இதயத்திலே அது இல்லை
மண்டையிலே எதுவுமில்லை!

யாழ் மண்ணே! யாழ் மண்ணே!
காய்ந்து நீ ஓய்ந்ததென்ன?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மழை பட்டால் உடற்புண்கள் சிழ்பட்டு விடுமே?

மா பலா வாழை முக்கனியின் பெருநாடே
காய்ந்து நீ ஓய்ந்ததென்ன?

மழை முகில் மண்ணுக்கு வந்தால் மாரி
மாரிக்கும் வரி கேட்டால் அது என்ன நீதி?

வற்றிய குளம் நிரம்ப
பசி பற்றிய தீ அணைய
கடவுட் கண்ணே விண்ணே
விழியாயோ?

குடல் நோய் கொண்டே
குழந்தைகள் குழற
இறையே இரக்கமுள் பெயரே
உருகிடும் விண்ணே உருகிடும் விண்ணே

வந்திடும் ஆண்டில்
தந்திடும் நிறைவே

கெடு மதி நீக்கி
படு படை போக்கி
விடுதலை ஆக்கி
வரும் ஆண்டில் வாரும் வாரும்...

வளர் வளர் வளர்
வாழ்த்துடன் வருகுது..

இப்படியாய் இருந்தால்
இளமை இப்படி இனித்தால்..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பருத்தித்துறைப் பக்கத்தே ஒரு பாத்தி
பார்த்தாயோ பருவமச்சான்?

தசை கனத்த பூசணி
பூச்சுடிச்ச வெள்ளரி
பார்த்தாயோ பருவமச்சான்?

பருத்தித்துறைப் பக்கமாய்ப்
போகலையே பருவ மச்சான்..

கனவு தான் கண்டாயோ?
படம் தான் பார்த்தாயோ?
பார்க்கலையே சின்னப்பொன்னு பார்க்கலையே.

காதல் குணம் கொண்ட மச்சான்
குச்சவெளிக் குளக்கட்டில்
கூடி வந்து குமரிகள் கும்மியடித்தனர்
கேட்டாயோ? கேட்டாயோ?

கட்டுவன் பக்கமாய்
கல்விச்சாலைகள் பெருகுதாம்
கட்டிடங்கள் முளைக்குதாம்

வானம் வெளிச்சாச்சாம் விருந்துகள்
வந்தாச்சாம்
கும்மியடி பெண்ணே கும்மியடி
கேட்டாயோ? கேட்டாயோ?

கதை கதையாய்ப் புளுகி
நட்டின்றி நகையின்றி
காதல் போட்டுக் கல்யாணம் பண்ணப்போறியோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்கவில்லை கேட்கவில்லை குமரிகள்
கும்மியடித்ததை

புல் எழும்பிப் புன்னகைக்குதே புதுக்காலமாச்சு
புதுச்சட்டை போட்டுவிட்ட மச்சானைப் பார்த்தாச்சு
புத்தூரில் மாரிக்கு முன் மாப்பிள்ளை பார்த்தாச்சு

ஒட்டு மாங்கன்றை நட்டுவிட
ஓடி வாரார் நெடுந்தீவுச் சுப்பர்

கடல் தழுவிச் செல்லும் கரையெல்லாம்
ஏல ஏலோம் ஏல ஏலோம்..
விளைமீன் விலையின்றி விட்டெறிய
தாளையடியிலும் முல்லைவெளியிலும்
ஏல ஏலோம் ஏல ஏலோம்

புல்லெழும்பிப் புன்னகைக்குதே புதுக்காலமாச்சு..

வந்தாறுமூலையிலே வந்தாடுதே சுரைக்காய்
சித்தாண்டிக் கொச்சைத் தமிழ் கேட்டு..
கிளிநொச்சியில் கிளி கடித்த நெல் மணிகள்
கோட்டைக்கல்லாற்றுக்குத் தன் சோகம் சொல்லும்..

மன்னார் மீன்குழம்பு மண்டைத்தீவு வானொலியில்
மணக்கும்.
வந்தாறுமூலையில் வந்தாடுதே சுரைக்காய்...
சித்தாண்டிக் கொச்சைத் தமிழ் கேட்டு

போருடை நம் சீருடையல்ல
பார் முழுதும் நாம் வேர் விட
பல மொழிகள் பல கலைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு வீடாய் உன்னடியே உருவாக
திருநாடே வாழத்துகிறோம்!

வளர் வளர் என
வார்க்கும் நீரொடு
வாழ்த்தையூட்டி வளர்த்த
உத்தமத் தாயின் உதடெடுத்து வாழ்த்துகிறோம்!

வேம்பினிலே கூடு கட்டப் புறாக்களுக்குக்
கிளை கொடுத்த தமிழ் நிலமே
வெண்புறாவைத் தூது விடு!

போருடை நம் சிருடையல்ல
ஓடி வரும் தேசங்களின் நாடிகளின்
ஓரிதயம் ஓரிடம் நீ யென்றாய்

வளர்.........வளர்...............வளர்...................

## வாழுகின்ற வாலிபங்கள்

காட்டின் காற்றுக் கண்கொண்டது
இரவும் பகலும் இமைக்க மறந்த
வடக்குக் காட்டின் காற்று
வாலிபவேட்கையில் வீசி வருகுது!

சீவன்களைச் சீர்படுத்தச் சிறிவருகுது
வேட்கையுள்ள கனர்கொண்ட காற்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரிருள் அடர்ந்த திசையறியாக் காடு
சீவன்களை மூடிவைத்து முத்திரை போட்ட
பழமைக்குள் பழசாய்ப் போன பட்டிக்காடு
பகுத்தறிவைப் படலைக்கு வெளியே வைத்துப்
பண்பாட்டுப் புண்ணுக்குள்நாற்றமெடுத்து

சூத்திரன் என்றும் பிராமணன் என்றும்
பித்தேறிப்போன திசையறியாக் காடு அதைத்
திசையறிந்து திக்கறிந்து திருப்ப
வேட்கையுள்ள கண்கொண்ட காற்று
வீசுது! வீசுது!

சீவன்களைச் சீர்ப்படுத்த அது சீறி வருகுது

தர்மம் சத்தியம் காப்பது என் ஜீவன் என்று
பனையடியில் புதைக்கப்பட்ட பரிசுத்தவான்கள்
உயிர்பெற்றெழ ஓடிவருகுது கண்கொண்ட காற்று
எழு! எழு! ஜீவனைப் பெறு....பெறு....
உயிர்த்தெழு உத்தமா! உயிர்த்தெழு!
பறிக்கப்பட்ட வாலிபமே உயிர்த்தெழு!

பார் பார் கண் கொண்ட வடக்குக்காற்று வருகுது....
சுட்டால் ஒளிரும் தங்கமென்று
சுட்டது உனைத் தீக்காலமொன்று
வெட்டப்பட்ட சரீரங்களுக்குள்
சத்தியம் காத்த சீவன்களே எழுக! எழுக!

வடக்கின் மூலைக்குள் கண்கொண்ட காட்டுக்காற்று
வாலிபவேட்கையில் வீறுகொண்ட காற்று
வருகுது! வருகுது!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காயம்பட்டால் தான் மனிதசாயம்
தெரியுமென்று வெட்டப்பட்டாய்
உன்னிறத்தை உண்மையின் நிறமென்று
உலகம் புரிந்தது!

ஊழிக்குமுன்னே உலகம் அழியுமுன்னே
தாயின் முலைப்பாலில் சத்தேறிப்போன ஜீவன்களே
எழுக! எழுக!

காயம் கட்ட
கண்கொண்ட காற்று வீசுது! வீசுது!

சிரசைத் தந்து இதயம் வைத்து
சுதந்திரம் தர சுத்தமான ஜீவக்காற்று வீசுது! வீசுது!

வடக்கின் வன்னிக்காற்று திசைகாட்டக்
கண்கொண்ட காற்று
இரட்ஷகர் இதயம் இரங்கியனுப்பும்
ஜீவனுள்ள ஈரக்காற்று வருகுது! வருகுது!

எழும்பிடு சூரியனாய்
ஏக்கத்தோடு எப்போது
சுத்தமான சுதந்திரம் வருமென்று
சுற்றித்திரிந்த சுகமிழந்த சுடப்பட்ட சுத்தனே

பரிசுத்தவானே
பரிசுத்தவான்களே
வாலிபவேட்கையின் வறட்சியிலே வடக்கின்
நாகதாளிக்கு நடுவே நடப்பட்டவனே
வாழைக்குருத்தாய் வடக்கும்கிழக்கும்
வரத் தவமிருந்தவனே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஞ்சத்திலும் பஞ்சடிப்பிலும்
உழையின் முகத்தில் உற்பத்தியானவர்களே
உதயசூரியனாய் எழுக! எழுக!

உங்கள் உலகம் சிரித்துப்பொலியுது
உலகம் விட்டோடாமல்
உங்கள் உலகத்தில் உரமான உத்தமர்களே
உங்கள் உலகம் சிரித்துப்பொலியுது
எழுக! எழுக! எழுக!

நீங்கள் மீண்டும் பிறக்காவிட்டால்
இந்த மனித சிவன்களுக்கு இனி நிறமேது?

சாயம் கொடுக்க
சரித்திரத்துக்கு நீங்கள் சாரம்கொடுக்க
எங்கள் இளவல்களே எழுக! எழுக!

ஒன்றே குலமென்று ஒருமிக்கவே எழுக!

பச்சைப் புல்லின் பசுமையோடு
பொசுக்கப்பட்ட பலியாடுகளே
எழுக! எழுக!

உடையார் உடைமை ஊரெல்லாம்
உள்ளவன் பண்ணையிலே
மனிதன் இனி மந்தையல்ல
உஷாரான உலகம் உருவாக
உருவான உன்னதர்களே

பலிகளை நிறுத்தவோ
பலிக்குப் பயிற்சி பெற்றீரோ
ஜீவனை ஜீவன் தீட்டுப்படுத்தலாமோ?
மூச்சிழுத்தால் காற்றுக் கறைப்படுமோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணாமற் போமோ?
குண்டுகளை எண்ணும்போது என்ன எண்ணுகிறீர்?

ஓ! ஓ! கர்ப்பங்களைக் கறைப்படுத்தவோ
கர்ப்பங்கள் உம்மைக் காவின?

எழுக! எழுக! கண்கொண்டது காற்று
சீவனுட் செல்ல
அந்தகாரமதை அறுத்து எழுக! எழுக!

உலகத்தைத் துடைக்க உயிர்கொண்டெழுக!

நீவிர் சொல்லும் புதியவேதமே
திறக்கட்டும் சத்தியத்தின் வாசலை

சமாதனம் சத்தியமாகட்டும்
உபத்திரவத்தின் உலையிலே உருவாகிப்
பரலோகத்தின் தேவதொட்டிலிலே
தவழும் செல்வர்களே
எழுக! எழுக!

இனித்தமையனைத் தம்பி கடிப்பதில்லை
இந்தத் தத்துவம் தரவே எழுக! எழுக!

வெந்தவர்களே
உமை உண்மை தெரியாமல்
உருக்குலைத்தது குருட்டுலகம்
உண்மையிதுவென்றழுகுது அவ்வுலகமின்று
அதனால் தான் கண்கொண்ட காற்றாய்
காயம் கட்ட மருந்தாய்
சீவனைத் தந்திடக் கர்ப்பமாய்
வருகுது! வருகுது!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுக நிரதனால் எம்மவர்
சிரிக்கிறார் உம்மால்
வெளிச்சத்தில் ஒன்றாய் வேதம் படிக்கச்
சுதந்திரச் சந்தியில் உம்மைச் சந்திக்கத்
திருந்தியவர்கள் நிற்கிறார்கள்
எழுக! எழுகவே!

பகையும் பழியும் போயாச்சு
எரிந்து கொண்டால் சாம்பல் மிஞ்சும்
புரிந்து கொண்டால் சரித்திரம் மெச்சும்
எழுக! எழுக! எம்மவர் சிரிக்கிறார்!

எழுக! எழுக! எம்மவர் சிரிக்கிறார்
கட்டுக்கள் அவிழ்க்க
சிறைகள் திறக்க
காயங்கள் கட்ட காத்திருக்கிறார்
விடுதலை விடுதலை
வெண்புறாக்கள் போற் பறப்பீர்! பறப்பீர்!

சமாதானம் பிறக்கச் சண்டை வந்தது
சரியாமற் புரியாமல் சரிந்தோர் சரித்தோர்
புரிகின்றோம் உமை
புதுவுலகம் பிறக்கிறதின்று
உங்களைத்தான் அது ஏற்றிப் பாருது
எழுக நீர்! எழுக நீர்!

கைகள் கோர்ப்பதற்காகவே
வெளிச்சம் உங்கள் பக்கம்
மரித்தோர் என்று மானிடம்
மண்ணுக்குள் தேடுவதில்லை இனி

சத்தியத்தின் சண்டைக்காரரே
சமாதானப் புறாவாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விண்வெளிப் பரப்பிலே பார்க்கின்றோம் உமை
எழுக ! எழுந்து நீர் பறப்பீர்!

பதவிப்பாதங்களின் செருப்புக்களுக்காய்த்
தோலுரிக்கப்பட்ட தோழனே
படைத்தவன் தன் முகத்தைப் பார்க்க
படைத்தான் உன்னையல்லவா?

படைப்பைப் படைத்தல் பழியல்லவா?
நீ உன்னையே படைத்ததனால்
சமாதானம் காணாத மனிதர்களுக்கெல்லாம்
சமாதான சந்நிதி நீயல்லவா?

சமாதானம் நித்தியம் வரை வேண்டுமென்ற
தத்துவத்தை நித்தியம் வரை நீ காக்க
உன்னுயிர் கொண்டல்லவா
இந்த உலகத்தில் சத்தியம் தந்தாய்
எழுக! எழுக!

குண்டால் சுடப்பட்டாய்
காட்டுக்குள் குற்றுயிராய் விடப்பட்டாய்
காதற்ற அந்த உலகத்தில் கடைசிவார்த்தை
முதல் நீ கற்ற அம்மா அம்மா
அதனால் தான் கண்கொண்டகாற்று வீசுது! வீசுது!

வேகம் கொண்ட உன் தாகம் கண்ட
காற்றுத் தான் வீசுது
ஈழத்தின் வேழமே
இணையற்ற வீரனே
காற்றைக் கேட்டிருப்பாய்
துடிக்கத் துடிக்கச் சீவன்
காற்றுக்குவிட்ட தூது என்ன?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறுதிமூச்சில்
இறுதியற்று நீ இணைந்துவிட்டாய்
காற்றோடு கலந்துவிட்டாய்
உடன் கண் கொண்டுதானே
அக்காற்று வீசுது!

நெஞ்சத்தின் நெடிய பெருமூச்சுக்களைக்
கொண்டே தீக்காற்றாய் வீசுது!

சிறையின் மதில்கள்
சித்திரவதையின் நகங்கள்
சாட்சியாய் அது வீசுது!

முதலாவது முலைப்பாற்சொட்டாய்
முகம் விழிக்கும் உனக்கு
இக் கவிவரிகள்
எழு மகனே! எழு மகனே!

அழிக்கின்ற ஆயுதங்களை
அழிக்கின்ற ஆதவனாய்
விழிக்கின்ற விடியலிலே
கிழிக்கின்ற விதைமுனையாய்
எழு முதல்வா! எழு!

கடவுளின் கண்ணீர் இது
ஜீவத்துளிகளாய்ப் பொழிகின்றன!

உன்மீது தான்
நீ பெறுமதியானவன்
*சபிக்கப்பட்டவர்களல்ல*
*தாயின் மடிக்குச் சரித்திரம் எழுதியவர்கள்!*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழும் வாலிபங்களே
வட்டுக்குள் வரும் குருத்துக்களை
வாழ்த்தவரும் வசந்தம் போல்
உம் நீடித்தசரீரம் போர்க்கப்
போருகின்ற இந்தப் பொன்னாடை
போதுமாவென்று கேட்கின்றாள்!

கண்ணீரோ வெந்நீரோ மானிட சீவனைக்
கறைப்படுத்தாதே
கர்ப்பப்பிறப்பே! கர்ப்பப்பிறப்புக்களே!
உலகத்தை உருட்டும்
சத்திய நித்திய சீவன்களே
எழுக! எழுக!

## வானின் ஜோதியே...

வானின் ஜோதியே வாழ்கவே வருகவே வந்தனம்
மலரின் மென்மையே கனியின் இனிமையே
காரிருள் நீங்கிடக் கண்கள் கண்டிட
வானின் ஜோதியே வாழ்கவே வருகவே வந்தனம்!

நீங்கின நீங்கின பருதுயர் பனிபோலே
நெடுதுயர் கலைந்தது கண்மலர் விழித்தது
நெஞ்ச வானிலே இனிப் பஞ்சமே இல்லையே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூமி தான் செழித்தது துளிர்கள் தான் எங்குமே
வானின் மழை போல் தேவ கருணை பொழிந்தது!

வருகிற சூரியன் தருகிற ஜீவனே
வயல்கள் நிறைந்தன செழுமையே
தூங்கிய கண்களெல்லாம் தூய நிறம் கண்டன
புதிய எழுச்சி பூமியில் புது நிறம்!

சூரியன் சொந்தமாய்ப் பூமியின் ஜீவ வீட்டிலே
தெரியுதே பகைப் புகார் நீங்கியே
பகலெல்லாம் பொற்கால்கள் பூட்டியே
தேவதேரிலே நித்திய இராஜ்ஜியம் புரியவே
எழுகின்ற சிறுவரே சிரியுங்கள் சிரியுங்கள்!

ஆடுங்கள் நடனம் ஆண்டவர் அருகிலே
வானின் ஜோதியே வந்ததே நடுவிலே!

கூத்தாடுங்கள் குடும்பமாய் குழந்தைகள் கூடுங்கள்
தீங்குகள் அகன்றன தேங்குரல் ஒலித்தது
தேவ சத்தமே பிறந்தது வாருங்கள் வாழ்த்துங்கள்!

வானின் ஜோதியே வானவர் முகங்களை
வரைகின்ற வண்ணமாய்ச் சிரியுங்கள் சிரியுங்கள்
தவச்சிறுவர்களே சிரியுங்கள் சிரியுங்கள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வன்னிமண்ணே... வன்னிமண்ணே...

நீங்காத நேசம் அம்மா
நீ விடும் மூச்செல்லாம்
நித்தியமாய் அது முளைகொள்ளுமம்மா!

கதலிக் குலை கொழுத்துக்
கனவாழை சரியுமம்மா!

உன்மடியெல்லாம் சொத்து
மண்ணெல்லாம் முத்து!

முல்லைக் கடற்கரை முகவெளியெல்லாம்
இசைந்து வந்து வருடிச் செல்ல
முத்துப்பரல்கள் முழுவொளியாய் நாண
அடம்பன் கொடியாடி அதைப் போர்க்கும்!

செவ்விளநீர் சிரிக்கும்
சிவத்தைப்பச்சையரிசியும் கலகலக்கும்
பெருவெளியும் அடர்காடும்
திருமேனி மூடும்!

மீன்வளம் மிஞ்சும்
முத்துக்கள் மஞ்சம் மன்னார்
ஈழத்தின் அமுதசுரபி நீயம்மா
தண்ணீருற்றில் முற்றிவெடிக்கும் பலாவாசனை
பூநகரி பூரா மணக்கும்!

பாலையும் வீரையும் மோதி மல்யுத்தம் பண்ண
வவுனியாக் குளத்திலே கொக்குகள்
மத்தியஸ்தம் வகிக்கும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மார்கழியிலே மாரியிலே
வன்னிப்பரப்பெல்லாம்
தாயே உன்செல்வத் திருநடனம்!

உன்மண்ணைத் தொட்டால்
தெய்வத்தின் தொட்டிலில் மணியாடும்
கார்த்திகைப்பூக்களில் தெரியும்
வானத்தின் நிறம் வானவர் வாசல்போலாகும்!

இளநீர் சொரியும் இரக்கமுள்ள மண்ணே
இளமையில் இன்று கண்ணீர் சொரியலாமா?

கொட்டிச்சொரியும் வளமிகு வன்னியே
இந்த இரவுக்குள் துரவுக்குள்
நீர் சொரிய வேண்டும்!

பொங்கும் புன்னகைபொலியவொரு
ஓங்கும் நிலைவேண்டும்
வீடுவிட்டு ஓடும் மானிடம்- இனி
நாடு மேடெங்கும் நலம்பெறவேண்டும்!

தொடும் வானம்
சுடும் பூமி
ஆடும் கதிர்வயல்கள்

முழுப்பரப்பும் எழுந்து கதிர்பரப்பும்
விஞ்ஞான மெய்ஞான சுடர்தோன்றும்
சுத்தசுதந்திரம் மடிதாங்கும்
சிசு கூடச் சுவாசிக்கும்!

போர்முனைப் புறாக்களே புறாக்களே
சொந்தநிலத்துள் சொந்தநிறத்துள்
உயிர்வாழும் உன்னதங்களே
நிலத்தின் சொந்தக்காரர்களே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டில் நாளை விளக்கெரிய
விளைஎன்பில் இன்று
எண்ணை வடிக்கும் சிப்பாய்களே..சிப்பாய்களே...

விருதலைக்காய் விதைக்கப்பட்டாய்
விதைக்கையிலும் விண்ணைநோக்கி
முளைகொடுக்க மூச்சுவிட்டாய்

நம் பயம் போக்கப் பாடுபட்டாய்
சுகம் தேடும் மனிதன் பகைவனுக்குப் பல்லிளிக்கையில்
நாளைய பிள்ளைகளுக்குச் சுகம் கொடுக்க
உடன் தோலெடுத்துப் படுக்கை தைத்தாய்

58 னை நியறியாய்
83 ன் ஆடிக்கொடுமைகளை
அதன் வேரோடி
நாளைக்கு நாளைக்கென்று அரசியல்
கரடிகாட்டுகையில்
கிழக்கிலும் வடக்கிலும் உன்னையே
இதயப்பலகைகளில் போர்இலக்கங்களால்
புரியும் படியாய்
உன்னைப் புதிய சரித்திரத்தின்
விடையாய்
எங்கள் பள்ளிக்கூடங்கள்
பாடம் படித்தன.

பிண்டங்கள் மனிதவயிறோடு
பசித்து அழுகின்றபோது
போரென்று பேர் கெட்டபோது
அதிகார நிலம் கழந்தால்
சுதந்திரச் சூரியன் பிறப்பானென்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தக் கனவுச் சூரியனைக் கையில் தர
நீயே கலப்பையாய்
உன் தசையை உழுதாய்!

பூகோளக் கண்கள் காணக் காத்திருக்கும்
காலத்தின் தேவையிலே
பூக்கும் புதிய தேசத்திற்கு
ஒரு யுகவெளியாய்க் கற்பமானவன் நீ!

இலக்கொன்றை எதிர்பார்த்தாய்
இலட்சியமதுவென்றே
இரவை இரையாக்கிடப்
பகலுக்குள் பட்டினி கிடக்கின்றாய்!

வீதிகளில் குண்டு வெடித்துப்
பயிற்சி பெறும் படைகள் வந்தபோது...
நீ இந்த இரவை இரையாக்கி
பகலுக்காய்ப் போர் செய்தாய்!

தர்மம் என்னவென்று
படித்துப் புரிவதற்குப்
பட்டம் பெறுவதற்குக் கலாசாலை நீயானாய்!

போரில் பேரெழுதும் வன்னிமகனே
உன் புண்பட்டுப் பண்பட்ட
தமிழ் நிலம் நாளை நிச்சயம்
உன்னைத் தான் தன்
ஆத்மாவின் ஜீவ சுவாசமாய்ச் சுவாசிக்கும்....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளைநிலத்தில் விதை வெடிக்க...

உயிருக்கு வேரூன்ற சொல்
தந்த உயர்தமிழே வாழ்க! வாழ்க!

பள்ளிக்குத் துள்ளிச் செல்லும்
பாதங்கள் பருகின்ற
பாதைக்குப் பாடம் சொல்லி

பிஞ்சுநெஞ்சில் அன்று
அறம் செயவிரும்பு
ஆறுவது சினம் என
அவ்வையின் ஆத்திசூடியை
அறங்கமழுமவரிச்சுவடியை
வரி வரியாய் வடித்து வைத்த
வாழும் வாத்தியாரே
வாழ்த்துகின்றேன் இத்தைத்தினமதில்

இருள்கிழிக்கத் திராவிட வான்திரையில்
ஈராயிரமாண்டுகட்கு முன்
முப்பாலால் நிறந்தீட்டி
தமிழ் சூரியனே வள்ளுவனே
வர்ணமாய்க் கரைந்ததென்ன

வள்ளுவனே வருகின்ற வருஷமெல்லாம்
தமிழ்வாசல் வரவேற்கும் வாழ்க! வாழ்க!

தரைமீது தமிழ்முதல் நானெழுத
விரல்பிடித்து நிலம்தேய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிதேய்ந்து நான்வளர
மாமனடிச்சானோ மாதாளம் கொப்பாலே
உலகையுருட்டி உறக்கம் கொடுத்து

புத்தகம் நான் சுமக்க
உலகத்தைச் சுமந்தவளே
தைத்தினத்தில் தாயேயுனை மறந்தால்
பொங்கலுக்கு வருகிற சூரியனுக்கே
குளிர் கொள்ளாதோ?

பனைப் போர்வை வடக்கெல்லாம்
தென்னஞ்சோலை தெற்கெல்லாம்
மா பலா வாழை நாற்றிசையும்
வங்கத்தொடுகடலும்
இந்துசமுத்திர இருகரையும்
வந்து வந்து முத்தமிட

செம்மண்ணும் வெண்மணல் மேடும்
சேர்ந்த வளநாடே
பூகோளக் கண்களுக்கு புன்னகை
முகம் காட்ட
எங்கள் வள்ளுவ தர்மத்தில்
முத்து நீ குளிக்காயோ?

நல்லகாலம் நடக்க
நம்நாடு காலெடுக்கப்
பொங்குது பொங்குது!

கன்னி நீ கோலமிட
வன்னிநாட்டு வயலரிசி வரவில்லையோ?
மட்டுநகர்ப் பசுவெல்லாம் மலடாச்சோ?
முற்றத்து மாதாளை முத்துத்தான் முற்றவில்லையோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொங்கலுக்குப் பெண்ணே நீ பேசாதிருக்கலாமோ?
வாழ்த்த வந்த வாய்க்கு
வகை வகையாய் நீ கொடுக்காயோ?
பாவற்கொடி படரவிட
பருவமச்சான் படலை திறந்து போனானே
பார்த்திரு பெண்ணே
நிலம் படரும் பூசணியும்
நீறுபூத்த வெள்ளரியும்
வெட்டிவருவான் நாளை!

நாடகம்மா நாடென்று
நல்லகதை நான் சொல்ல

நல்லதங்காள் நாடகம்
நடந்து முடிஞ்சாச்சு
ஏழு பிள்ளைகளும் உயிர்த்தெழுந்தாச்சு
வாழ்த்த வாயெடுப்போம்!

இந்தத் தையொடு இன்னலோடும்
இரவுமையைப் பூச நட்சத்திரக்கண்கள்
தமிழ்வெளியில் எட்டிப்பார்க்குதே ஏன்?
நுகத்தடி சுமக்கின்ற மாட்டின் காதிலே
மந்திரம் சொல்கின்ற மரத்தடி வெளவால்களே!

கோத்திரமும் சாத்திரமும்
மானிட முலைந்திரத்தைத் தின்னும்
கற்காலக்கறையான்கள்

முத்தமிழும்
முப்பாலும்
முச்சங்கம் மூன்றும்
சூரியக் கதிர்களைச் சுத்தம்செய்வது தெரியாதா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளமைத் தாகத்தோடு
விடியும்வரை
இரவுமையைப் பூச நட்சத்திரக்கண்கள்
தமிழ்வெளியில் காத்திருக்கின்றனவே ஏன்?

பொங்கலைப் பொங்கு
பொறுத்தது போதுமென்று
புதுப்பாட்டைக்கொண்டு வரும் பூங்குயில்
காதுக்குள் சொல்லும் கதைதான் என்ன?

தமிழ் விண்வெளியில்
மையல் கொண்ட
மை பூசக்காத்திருக்கும்
நட்சத்திரக்கண்கள்
நாணிப் போகலாமோ?

இலக்கிய மை தீட்ட
இதயக்கோப்பையிலே
மூவகைத் தமிழ்தான் குழைக்காயோ?

விளைநிலத்தில் விதைவெடிக்க
*நட்டநாற்றும் நிமிருமங்கே*

நல்ல வயல் செழிக்கும்
மும்மாரி தான் முழங்குமங்கே

கொழுத்த கிடாய்களும்
கொள்ள முடியாப் பெருவிளைச்சலும்
வருமென்று வாழ்த்தத் தானே தைத்திருநாள் வந்தது!

தென்னம்பாளையிலே
சிரிக்கின்ற வெள்ளைப் பூ வாழ்த்துது
நுங்குக் குலையினிலே
கோதிக்கடிக்கின்ற அணிலும் வாழ்த்துது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேன்வடியும் பலாவினிலே
கூடுகட்டும் குளவிக்கூட்டமும்
அப்படித்தான் வாழ்த்துது!

ஊழிவரை உற்றுப்பார்க்கும்
நட்சத்திரக் கண்கள் நாணிப்போகலாமோ?
விடொவ்வொன்றும்
விதவிதமாய் விழாக்காண விழிக்கும்
வீதிகளில் விருந்து வரும்

மல்லிகை முல்லை மணம் மறந்தாச்சோ?
மங்கையரே மருக்கொழுந்துச் சாயம்
மாமன் மகன் வருமுன் பூசவில்லையோ?

இஞ்சி மஞ்சள் இலை காயமுன்பு
இதமான கொஞ்சு மொழி பேசி
பின்னி முடித்துச் சிறுமியரே
வாழ்த்துப்பாட வரவில்லையோ?

நாடமுது ஓய்ந்தது
நரி ஓடிப்போச்சு
வெள்ளைப் புறா வந்தாச்சே!

காக்கையிடம் கதைகேட்டு
கெந்திப் பிடிக்கக் கோடு கீறும்
சிறுமியரே சிறுமியரே
பொங்கலுக்குப் புதுப்பாட்டுப் பாடு!

விரைந்து வருகுதே
வீறுகொண்ட ஒரு வருடம்

படைவிலகிப் போகுது
மடமை நீங்கிப் போகுது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றுகூடி வருகிறார்
தமிழ் ஓங்கு புகழ் காணுது!

சேர்ந்து நிற்கிறார் செந்தமிழர்
அவர் கொடி விண்ணில் பறக்குது!

அறிஞர் வருகிறார்
அவர் ஆற்றல் பெறுகிறார்

ஏழை எளியர்
ஏற்றம் பெற
எங்கும் தர்மம் ஓங்குது!

பச்சைவயல் செழிக்கவே
உழவர்படை போகுது!

நல்லமாந்தர் வாழவே
தொண்டர்படை எழுகவே!

நீதி வழி நடப்போம்
அன்பு நெறி காப்போம்!

எழுகவே! எழுகவே!

புதிய ஆண்டு வருகுது
புன்னகையாய் அது மலருது

வருகுதே வருகுதே சுதந்திரம்
வாழும் மாந்தர் யாவர்க்கும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விலகிவிடு

தீண்டுகின்ற வசை வார்த்தைகளை
வக்கனைகளை வாசற்படியில் வரைந்து
நல்ல இரவு நிலவைக் கறையாக்கும்
சோம்பேறி நாக்குகளே,

மாசுபட்ட இரவுகளை
தூசுபட்ட இதயங்களை
வரைகின்ற பேயின் தூரிகையே
திருந்தாயோ?

சொற்களைக் குறைப் பிரசவத்தில்
கொச்சைப் படுத்தும் இச்சை மனிதா
உன்னால் நடை பாதையெல்லாம்
வருநாள் எல்லாம்
நெருஞ்சிமுள்ளாய்த் தைக்கும்.

உன்னால் சூரியனின்
விடியல் திரையிடப்படும்
விலகி விடு!!!

நல்லதைத் தேடு..ஓடு..
நாளை நீதான் சூரியன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாரிட்ட நெருப்பு

வாய்க்காலுக்குள் வடிந்தது வெள்ளம்
வண்டலோடு வெள்ளை மண்ணோடு
புதிதாய் ஒழுங்கை பட்டாய் சிரித்தது!

செவ்வாய் மங்கையென செம்பரத்தை சேர்ந்தது
முருங்கை வெண்பூ வேலிக்கு மேலால் பல்லிளித்தது
காக்கைாய் ஒன்று சிலிர்த்துப் பன்னீர் தெளித்தது!

ஓய்ந்த மழையுள் காய்ந்த மனிதன்..
ஓயா உழைப்பின் காய்ப்புடன்..
ஒருகை நுகம் தாங்க
மறுகை வடம் பற்றி இழுக்க,

தசை தோல் எலும்பு ஒன்றையொன்று
நான் முந்தி நீ முந்தி என
அறுபது வயது மேனியிலே அடம்பிடிக்க

சரித்திரம் காய்ச்சி வடித்த சித்திரம்
தரித்திரம் வார்த்த மனித வடிப்பு

அரசியல் அசிங்கம்
அற்புத மனிதத்தை
சித்திரவதை செய்து
சிதைத்த சிற்பம்

யாழ் ஒழுங்கைக்குச் சூடேற்றும்
வாழும் மனிதன் வந்து விட்டான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வண்டலின் தடம் ஈரம் கசிய
துளிகள் சொட்டும்
வேலியின் ஓலைக்கண்கள்,

மானிடக் கொடுமையினை
மனிதக் கடமையென சில
மரமண்டைகள் மேடையேற்றிய
சாதி சமய வாதப் பெரும் பேயாட்டத்தின்
மானிட ஊனத்தின் உச்சக் கட்டம்

உறவுகள் இல்லா ஒரு வீடு
சேறாகிப் போன திண்ணை

நிழலுக்குத் தானே வீடு மழைக்குமா?
வந்தவனுக்குக் குந்த முடியவில்லை..

பார்வை மங்கிய கண்கள்
பாயைத் தேடின!

எல்லாம் வெள்ளம்
இதை எப்படிப் பிழியலாம்
ஏய்க்காமல் பிழைப்பவன்
ஓய்வைப் பறிப்பதற்கு
ஈரமே யாரிடம் கற்றாய் இதை?

வர்க்கத்தை விதியாக்கி
தன் சந்ததிக்குப் பிழைப்பாக்கி
தொழிலாளியைத் தாழ்த்தப்பட்டவனாக்கிப்
பரம்பரைக் கோடுகிழித்த
பாம்பாட்டிகளிடமா கற்றாய்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாளாந்தக் கூலிக்கு
நாடும் வீடும் நரகமா?
குளிருக்குப் போர்வை
குடியானவனுக்கு முடியுமா?

உழைப்பவனுக்குத்தான்
உறக்கம் உரிமை என்று
உக்கிய கூரைக்குத் தெரியுமா என்ன?

ஏழையின் மஞ்சம்
இறைவன் இதயம்
சொற்கள் அற்ற கற்கள்
சொல்லுமா தங்கள் இதயம் எங்கேயென
செல்லாக் காசாகிச் செப்புத்தகடாகி
செல்லரித்த ஏடாகி
அது எங்கே இருக்கிறது?

இரத்தம் வியர்வையாய்க் கசிந்திட
இழுக்கின்றான் வண்டியை
இரவைக்கழிக்க இருப்பிடம் தேடி

இரையுண்ண இல்லம்
இடம் தர மறுத்தாலும்
இரைப்பை இரையை
மறுக்கமுடியுமா என்ன?

ஊருந்தும் பேருந்தும்
மருந்தும் மணக்கும்
வீதிக்கு வந்து நொந்து பார்க்கின்றான்
வயிறு எரிகின்றது நெஞ்சு எரிமலையாகின்றது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்து ஆண்டுக்கு முன்
ஒரு மத்தியானம்
மரவள்ளி வாட்டுக்குப்
பின்னே தேக்குக்குக் கீழே..

இஸ்லாமிய வியாபாரி வீட்டின்
இரும்புக் கேற்றுக்கு முன்னே
கடலை வியாபாரி கடகம் பரப்பியிருந்தான்

கையளவு பொத்தி
அள்ளினான்
அரைக்களிசான்
அரக்கன்
அரச வாகனத்தில்
வந்திறங்கி
அள்ளி வாய்க்குள் போட்டான்
தனக்குத் தானே வாய்க்கரிசியாக
ஏழையின் உழைப்பை உண்பவன்
உண்பது தன் ஊனையல்லவோ?

பொலீஸ் என்றால் எல்லாம்
பொதுவா?
கடலைக்குக் காசைக் கொடுத்தால் வியாபாரம்
காசைக் கேட்டவன் கன்னத்தில்அடித்து
நெஞ்சில் முட்டியால் குத்தினால்,
நிற்கும் நிலம் உன்னைத் திட்டாதோ?
வாங்கும் சம்பளம் தீட்டாகாதோ?

வீட்டிற்கு முன்னே
நெடுகக் காணும்
கடலை வியாபாரிக்குக்
கைகொடுக்க இடையே வந்தவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இஸ்லாமிய இளைஞன்
திமையைக் கண்டு
தீச்சுவாலையாய்க் கனன்றது கண்கள்!

அரக்கனை வதம் செய்ய
பரமாத்மா படியிறங்கத் தான்
வேண்டுமா?
சாக்கியைக் களங்கப்படுத்தும்
சுப்பக்காரர்களின் கடைவாயைக் கிழித்து
குரல் வளையில் குர்ரான் ஒத சலீமும் வரலாம்

இந்துவுக்கு இடைஞ்சலென்றால்
இஸ்லாமியன் வரலாம்
இந்துவும் இஸ்லாமியனுக்கு இணங்கலாம்
வந்துதவ மனிதம் தயாரென்றால்
மதம் மகிமையாகுமே தெய்வம் தெளிவாகுமே,

பறித்துத் தின்பவன் வெறியன்
மறித்துத் தடுப்பன் மனிதன்
குறுக்கே வந்தவன் தான்
ஜிப்பாபோட்ட
மீசை முளைக்காதவன்
தகப்பனைத் தாங்கும் தனயன் போல்
தாவி வந்த அவன் கண்களில்
ஆவேச அனல்
அடிகளைத் தன்னில் வாங்கி
ஏழைக்குத் தோள் கொடுத்து
ஆண்மைக்கு அணி செய்து நின்றான்!

கள்ளத்தோணியாம் கடலைக்காரன்
உழைத்துத் தின்பவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரிமையாளன் நாட்டுக்கு,
உறிஞ்சி வாழும் ஒட்டுண்ணிக்கு
ஊரின் வேரின் கிருமிக்கு
தீயின் நாக்குத் தான் சரியான இடம்,

தீர்ந்து போகவேண்டியவர்கள்
தீர்ப்பிட உரிமையுள்ளவர்களா?

நினைவை மீட்டபடி
எழுபத்து ஒன்பதிலிருந்து
எண்பதுக்குள் நுழைகின்றான்
இழுவை வண்டியில்
இராசாக்கள் இல்லா
இராணித்தியேட்டர் முன் இளைப்பாறியது

பேருந்து நிலையம் அதைச் சூழ்ந்து
தகரக் கூடுகள் குளிர்பானக் கொட்டில்கள்
விட்டில்கள் மொய்க்கும் விளம்பரத் தட்டிகள்

காவலூரிலிருந்து கடைசிப் பேருந்து
கடற்படைக் காடையர்கள்
கைப்பிடிக்குள் தப்பி
கீழிறங்கும் சாரதி
கிலி செய்ய வைத்த கடற்படையின்
கீழ்த்தனத்தைக் கூற:
தொண்டையை நசித்தனராம்
தூஷணமாய்த் தூஷித்தனராம்
தமிழனைத் தரம் தாழ்த்தித்
தாறுமாறாய்க் குலைத்தனராம்

கடற்படைகண்டு கனவான்கள் விலகினர்
காற்சட்டை மனிதர்கள் மறைந்தனர்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெறிபோதை நாக்கு மாமிசம் கேட்டிருக்கவேண்டும்
திமிரோடு தின்றனர் திட்டிக் கொண்டே
சுதந்திரப் போராளி சுபாஷின் விடுதியில்,
சுத்த வெறியருக்குச் சுபாஷைத் தெரியப்படுத்த
கூலிகள் இருவர் தோளைத் தினவாக்கினர்
இல்லை சுபாஷ் சுந்திரபோஷ்கள்
வெறுங்கையுடனே வெகுண்டு வந்து
வெறுமேனி வெக்கையில் மினுங்க
ஈயைத் தட்டித் துரத்துவதுபோல்

வலிந்து வைரம் பாய்ந்த குத்தில்
குதிக்கால் தெறிக்கக் கெதிகலங்கி
கோட்டை நோக்கி ஓடினர்
கடற்படையினர் காற்று வாங்க,

யாழ் மண்ணில் தமிழை மதியாதவன்
மிதிக்க முடியுமா என்ன?

பிறந்த பூமி பொன்னள்ளித்
தரவில்லை தான் கூலிகளுக்கு
குடித்த காற்றும்
குளித்த நீரும்
மண்ணின் ஊற்றல்லவா?

கசியும் வியர்வை மட்டுமா
உடலும் ஊறும் உதிரமும்
உன்னை உரமூட்டாமல்
எம்மை அலங்கரிக்கவோ?

நாம் என்ன உன்னை அரிக்கும்
கறையான் இனமோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நகர் விரைந்து இருண்டது
படை வரும் பழி தீர்க்க என்ற பயத்தில்

(செ)ப(ட்)டையர் கடைகளை உடைத்து
வெடிகளைத் தீர்த்து வெருட்டிப் போயினர்!

யாழ் மண்ணே தமிழ் வாழ் மண்ணே
பாழ் செய்யும் படை என்று விடை பெறும்?

இன்று ..
இருள் வரு முன்னே இருளாகும் பெரு நகரம்..
மருள் விழியோடு தெரு நடக்கும்...
இடியோசை போல் குண்டு தீரும்..
வாகனங்கள் ஓடி மறையும்...
இராணுவம் ஒழிச்சு விளையாடும்,

சத்திரம் நோக்கி சரித்திரம் பின்நோக்கி
வளைந்து விசையேற்றி வண்டினை இழுக்கின்றான்,
குளிர் நிழல் கொடுத்து குடைபோல்
காலங்களைத் தாண்டி
கடினங்களைக் கண்டு
சோகத்தின் சரித்திரம்
எரிவுகளை ஏப்பம் விட்டு
வயிரவருக்கு வீடு கொடுத்து
சத்திரத்திற்கு முண்டு கொடுத்து
சந்தையை சுத்தம் செய்யும் சுவாசப்பையாய்
ஆண்டுகளை ஆண்டுகொண்டிருந்த அரசமரம்
வண்டில் நுகத்திற்கு வேர் கொடுத்தது,

சத்திரத்தின் திண்ணை
முதுகுக்கு முகம் கொடுக்க,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நித்திரை கொஞ்சம் தத்தெடுக்க,
பிராணிகளோடு பெருமுச்செறிந்து...
மயக்கத்தில் கலந்துவிட்ட மனிதம்
வெருண்டு விழித்தது..

பாய்க்கடை பற்றியெரிகின்றது
பாய்கின்ற களிசான் கும்பல்..
உயிரை மிஞ்சியா நீளும்
துப்பாக்கி தொடுவதும்
துளைப்பதும் உடலைத் தானே!

வாளி தண்ணீரோடு
தீயை அணைக்கத் திரமானான்
இனவெறியர் இட்டநெருப்பில்
அவிந்தது நீர்
அக்கினி அந்நியபாஷையில் தாண்டவமாடியது!

வேட்டை நாயின் வேகத்தில்
வெடு வெடுவென படுமிடமெங்கும்
தீ மூட்டி விளையாடிய இராணுவம்
வெற்று மனிதன் விழும்வரை தாக்கியது!

இரத்தக் கசிவும் இரணமும்
சாம்பலேறிச் சகதியில்..
முள் முடி இரணக்கசிவு போல்
முகத்தை மூடிய செந்நீர்க்கறை

வண்டிலில் தொங்கிய விழுமிய சரீரம்
கல்வாரிக் கர்த்தரின் சிலுவைப்பாதையென
வைத்தியமனை நோக்கி
நுகத்தைத் தாங்கி
நுகத்தில் தாங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காந்தி சிலை முகத்தில் சிரிப்பா?
கண்களைத் தழுவுகின்ற இருள்
நித்திய ஓய்வுக்கு மணியடிக்கின்றது
சரீரம் சாய்ந்தது
"இவர்கள் செய்வது
இன்னதென்று அறியாதிருக்கிறார்கள்
மன்னியும் பிதாவே"
சொன்னது இயேசு..
சொன்னதைக் குறித்தது யார்?

வைத்தியமனை வாசலில்
ஒரு சிலுவைக் காட்சி.
இரு புறம் தொங்கும்
யார் அந்த இரு கள்ளர்கள்?
யார் அந்தப் பரிசேயர்கள்?
யூதாஸ்?
பிலாத்து?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிமேகலைப் பிரசுரம்
சென்னை-600017

மலர் பிரிண்டர்ஸ் 044-8224803

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org